Saturday

# மெயில்

සැටඩේ මේල්

A Fascinating Weekly Bulletin

01 - 41

10-07-2010

பக்கங்கள்: 24

விலை: 15/=



பொதுசன நூலகம்

மாநகர சபை, யாழ்ப்பாணம்


# இந்தியாவில் அதிகரிக்கும் கௌரவக் கொலைகள்



## ஆண்டு தோறும் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பலி


அடுத்த பக்கம் புரட்டுங்கள்...



Registered as a Newspaper at G.P.O.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப கௌரவத்தைப் பாதுகாத்தல் என்ற பெயரில் இந்தியாவில் அடிக்கடி பெரும் எண்ணிக்கையில் படுகொலைகள் நிகழுகின்றன. இது இந்திய அரசாங்கத்துக்கு பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்திருக்கிறது.

இந்த நெருக்கடியைக் கையாளுவதற்கு கொண்டுவரவேண்டிய சட்ட திருத்தங்கள் குறித்து ஆராய்வதற்கு அமைச்சரவை உப குழுவொன்றை நியமிப்பதற்கு பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கின் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

பாராளுமன்றத்தின் மழைகாலக் கூட்டத் தொடரின் போது சட்ட மூலம் ஒன்று சமர்ப்பிக்கப்படவிருப்பதாக அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய மத்திய தகவல், ஒலிபரப்புத் துறை அமைச்சர் திருமதி அம்பிகா சோனி தெரிவித்திருந்தார்.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 1000 க்கும் மேலான கௌரவக் கொலைகள் (Honour killing) நடைபெறுவதாக சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளார்.

குடும்ப கௌரவத்தைக் காக்கிறோம் என்ற பேரில் இந்தப் படுகொலைகள் நிகழ்த்தப்படுகின்றன என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

சர்வதேச அளவில் நடைபெறும் கட்டாயத் திருமணம், குழந்தை கடத்தல் ஆகியவை குறித்த மாநாட்டை லண்டன் மெட்ரோபாலிடன் பல்கலைக்கழகம் லண்டனில் சமீபத்தில் நடத்தியது. இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள், சட்ட நிபுணர்கள் பங்கேற்று தங்களது கருத்துகளைத் தெரிவித்தனர்.

இந்நிலையில், இந்தியாவைச் சேர்ந்த சட்ட நிபுணர்களும் சகோதரர்களுமான அனீல் மல்கோத்ரா, ரஞ்சித் மல்கோத்ரா ஆகியோர் இந்த மாநாட்டில் பங்கேற்று இந்தியாவில் நடைபெறும் கட்டாயத் திருமணம் குறித்தும் கட்டாயத் திருமணத்துக்கும் கௌரவக் கொலைக்கும் தொடர்புள்ளதைச் சுட்டிக்காட்டியும் அறிக்கை வெளியிட்டனர்.

அந்த அறிக்கையில் அவர்கள் கூறியிருப்பது;

இந்தியாவில் கட்டாயத் திருமணம் பரவலாக நடந்துவருகிறது. இதுவே பெரும்பாலும் கௌரவக் கொலைக்குக் காரணமாக உள்ளது. இந்தியாவில் திருமண விவகாரத்தில் பெரும்பாலான பெற்றோர்கள் தங்களுடைய விருப்பத்தைக் குழந்தைகள் மீது திணிக்கின்றனர்.

இவ்வாறு திணிப்பதை எல்லாக் குழந்தைகளும் ஏற்றுக் கொள்வதில்லை. சிலர் பெற்றோரை எதிர்த்து தங்களுக்கு பிடித்தவர்களை திருமணம் செய்து கொள்கின்றனர். இதை எல்லாப் பெற்றோர்களும் சகித்துக் கொள்வதில்லை. குடும்ப கௌரவத்தைக் காப்பதற்காக தங்களது குழந்தைகளை கொலை செய்யும் அளவுக்கு சென்றுவிடுகின்றனர்.

இது போன்ற நிகழ்வு இந்தியாவில் பரவலாக நடந்து வருகிறது. இதற்கு நாட்டின் பாரம்பரியமிக்க சமூக அமைப்பே காரணமாகவுள்ளது. நாட்டில் பஞ்சாப், ஹரியானா மற்றும் மேற்கு உத்தரப் பிரதேசப் பகுதியில் தான் இது போன்ற கௌரவக் கொலைகள் அதிகமாக நடந்து வருகின்றன.

இந்த பகுதியில் மட்டும் ஆண்டுக்கு 900 க்கு குறையாமல் கௌரவக் கொலைகள் நடைபெறுவதாக இந்திய ஜனநாயக மாதர் சங்கம் தெரிவித்துள்ளது. கௌரவக் கொலை என்பது முஸ்லிம் மதத்தில் மட்டுமல்லாமல் இந்து, சீக்கிய மதத்திலும் பரவலாக நடக்கிறது.

கௌரவக்கொலை இந்தியாவின் முக்கியமான சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. உலகத்திலேயே இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளில்தான் அதிகமான கௌரவக் கொலை நடப்பதாக தெரியவந்துள்ளது.

நிலைமை இப்படியிருக்க, நாடு முழுவதும் நடக்கும் கௌரவக் கொலை குறித்த முறையான புள்ளி விவரம் இந்திய அரசிடம் இல்லை. இது போன்ற மோசமான செயலில் ஈடுபடுவோரை கடுமையாகத் தண்டிக்கும் வகையில் சட்டமும் இல்லை.

இதை இந்திய உள்துறை அமைச்சகமும் சட்டம் மற்றும் நீதி அமைச்சகமும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதுபோன்ற குற்றத்தில் ஈடுபடுவோரை கடுமையாகத் தண்டிக்கும் விதத்தில் இந்திய தண்டனைச் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## சன்மானம் பெற ஒரு வழி



ஒரு பெரிய கடைத்தொகுதியில் எக்கச்சக்கமான சனக் கூட்டம். அதற்குள் இடிபட்டுக்கொண்டு பொருட்களைக்கொள்வனவு செய்து கொண்டிருந்த பெண்மணியொருவரின் கைப்பை கீழேவிழுந்து விட்டது. ஆனால், அவர் அதைக் கவனிக்கவில்லை.

ஆனால் நேர்மையான பையன் ஒருவன் கைப்பை விழுந்ததைக் கண்டுவிட்டான்.உடனே ஓடிச்சென்று அதை எடுத்த அவன் அந்தப் பெண்மணியிடமே கொண்டு வந்து கொடுத்தான்.

கைப்பையை வாங்கி அதைத் திறந்துபார்த்த பெண்மணிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

'நான் இந்தப் பையைத் தொலைத்த போது அதற்குள் ஒரேயொரு 100 ரூபா நோட்டுத் தானே இருந்தது. ஆனால் இப்போது ஐந்து 20 ரூபா நோட்டுக்கள் இருக்கின்றன' என்று பெண்மணி தனது அதிர்ச்சிக்கான காரணத்தைப் பையனிடம் சொன்னார்.

பையனிடமிருந்து பதில் வந்தது, 'அது சரி அம்மையாரே கடந்த தடவை நான் ஒரு பணப்பையைக் கண்டெடுத்து உரியவரிடம் கொடுத்தபோது எனக்கு சன்மானமாகத் தருவதற்கு அவரிடம் மாற்றிய காசு இருக்கவில்லை'.

## மீண்டும் பயன்படுத்துவதற்கு வசதியாக...!



தனது காதலிக்கு அன்பளிப்புச் செய்வதற்காக இளைஞன் ஒருவன் நகைக்கடையில் விலையுயர்ந்த பதக்கம் ஒன்றை வாங்கினான்.

'உங்கள் காதலியின் பெயரை அந்தப் பதக்கத்தில் பொறிக்கவிரும்பவில்லையா' என்று நகைக்கடையின் விற்பனையாளர் இளைஞனைக் கேட்டார்.

ஒரு கணம் 'சிந்தித்து விட்டு இளைஞன் சொன்னான் 'எனது பேரன்புக்குரிய ஒரேயொரு காதலியே' என்று பொறித்துவிடுங்கள். காதல் முறிந்துபோனால் ஆத்திரத்தில் அவள் பதக்கத்தை திருப்பி எறிந்துவிட்டால், மீண்டும் அதை நான் பயன்படுத்தக் கூடியதாக இருக்குமல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100710-1.indd 2

# அனுபவம் புதுமை இவரிடம் கேட்டோம்

## 'தவறை தவறென்று ஏற்றுக்கொள்ள இலங்கையர்கள் பழகவில்லை'

அரசியலில் பணம் சம்பாதிக்கும் எண்ணமோ, தேவையோ எனக்கு கிடையாது. நாட்டை அபிவிருத்தி பாதையில் இட்டுச் செல்வதே எனது நோக்கம் என்று ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக கொழும்பு மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள புதிய எம்.பி.யான சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.



Saturday மெயிலுக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே சுஜீவ சேனசிங்க இந்தக் கருத்தை வெளியிட்டார். அவர் வழங்கிய பேட்டியின் விபரம் வருமாறு;

**கேள்வி: உங்களது கல்வி மற்றும் குடும்ப பின்னணி பற்றி?**

**பதில்:** கண்டி திருத்துவக் கல்லூரியில் நான் எனது பாடசாலை கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டேன். அதன் பின்னர் சட்டக்கல்லூரியில் பயின்று சட்டத்தரணியானேன். குடும்பத்தை பொறுத்தவரை எனது தந்தையொரு சிரேஷ்ட சட்டத்தரணி.தாய் ஓய்வு பெற்ற விரிவுரையாளர். தற்போது சமூக சேவையில் ஈடுபட்டுள்ளார். மூத்த சகோதரர் இங்கிலாந்தில் வைத்திய நிபுணராக இருக்கிறார். இரண்டாவது சகோதரர் அமெரிக்காவில் நிதி கட்டுப்பாட்டாளராக பணிபுரிகிறார். நானே குடும்பத்தில் இளையவன். எனக்கு அரசியலில் அல்லது ஜே.ஆர். ஜயவர்தன, ஆர்.பிரேமதாச, காமினி திஸாநாயக்க தற்போது, சஜித் பிரேமதாச போன்ற அரசியல்வாதிகளில் ஆர்வம் இருந்தது.

**கேள்வி: உங்களது அரசியல் பிரவேசம் மற்றும் அதற்கான காரணம் பற்றி?**

**பதில்:** ஜனாதிபதி சட்டத்தரணியானதன் பின்னர் நான் அரசியலுக்கு பிரவேசிக்க இருந்தேன். எனினும் 2005 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலில் [மேல் மாகாண சபைக்கு] போட்டியிட கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எனது பெயரையும் தெரிவு செய்து விட்டதால் எதிர்பாராத விதமாக அரசியலுக்குள் வரவேண்டியதாகி விட்டது. இலங்கை நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற ஆர்வமே எனது அரசியல் பிரவேசத்துக்கான அடிப்படைக் காரணம். ஐ.தே.க.வின் முன்னாள் முக்கியஸ்தரான காமினி அத்துகோரளவுடன் நான் 2001 ஆம் ஆண்டில் சேர்ந்து செயற்பட்டேன். அவ் வருடம் ஜூன் மாதமளவில் நடைபெற்ற மக்கள் பேரணியின் போது நுகேகொடையில் வைத்து நான் பொலிஸாரின் துப்பாக்கி பிரயோகத்துக்கு இலக்கானேன். இந்த சம்பவம் தொடர்பான வழக்கில் இறுதியில் எனக்கு மூன்றரை இலட்சம் ரூபா நட்டஈடாக கிடைத்தது. இந்த சம்பவம் பற்றிய வழக்கு விசாரணைகளே குறைந்தபட்ச அதிகார பிரயோகம் தொடர்பான பொலிஸாரின் கற்கைகளுக்கு இன்று பயன்படுத்தப்படுகிறது. 2005 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலே எனது முதலாவது அரசியல் பிரவேசமாக அமைந்தது.

**கேள்வி: முதலாவது பாராளுமன்ற அமர்வு அனுபவம் எப்படியிருந்தது?**

**பதில்:** ஆரோக்கியமாக இருந்தது. சபையில் இருந்த சிரேஷ்ட உறுப்பினர்களை பார்த்ததும் இந்த சபையின் மூலம் சிறந்த பல விடயங்களை செய்ய முடியுமென்ற எண்ணம் உருவானது. நிதி ஒதுக்கீடு, சட்ட அமுலாக்கம், மோசடிகளைத் தடுத்தல், அபிவிருத்தி என பல விடயங்கள் பற்றிய அறிவு இருந்த போதும் அதிகாரம் இல்லாமல் இருந்தது. எனினும் தற்போது அதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நான் பணம் சம்பாதிப்பதற்காக அரசியலுக்கு வரவில்லை. இன்று இந்தியா, சீனா போன்ற நாடுகள் வேகமாக முன்னேறி வரும் நிலையில் அவற்றை பின்பற்றி இலங்கையையும் முன்னேற்றுவது இலகு.

**கேள்வி: இளைய தலைமுறை அரசியல்வாதி என்ற வகையில் அரசியலில் உங்களது இலக்கு என்ன?**

**பதில்:** அரசியலில் முடிந்தளவு உயர் ஸ்தானத்திற்கு செல்வதே எனது நோக்கம். எனினும் மக்களே அதை தீர்மானிக்க வேண்டும். அதைவிடுத்து பதவிகளுக்காக நான் அலைந்து திரிய மாட்டேன்.

**கேள்வி: பாராளுமன்றத்தில் புதிய எம்.பி.க்களுக்கு இடையிலான உறவுகள் எப்படியிருக்கின்றன?**

**பதில்:** மிகவும் ஆரோக்கியமாக இருக்கின்றன. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என எந்த பேதமும் இன்றி பழகுகிறோம்.

**கேள்வி: அரசியலில் நீங்கள் எந்தெந்த துறைகளில் ஆர்வம் காட்ட விரும்புகிறீர்கள்?**

**பதில்:** நிதி, வெளியுறவுக் கொள்கை, விவசாயம் மற்றும் நகர அபிவிருத்தி உள்ளிட்ட துறைகளில் எனக்கு ஆர்வம் இருக்கிறது.

**கேள்வி: அரசியல் தவிர்ந்த வேறு எந்த துறையிலாவது ஆர்வம் இருக்கிறதா?**

**பதில்:** சட்டத்துறையில் ஆர்வம் இருக்கிறது. ஏனெனில் அடிப்படையில் நான் ஒரு சட்டத்தரணி. இன்னும் நீதிமன்றம் செல்கிறேன். அத்துடன் கலைத்துறையிலும் நாட்டம் இருக்கிறது. ஏனெனில் நான் ஏற்கனவே திரைப்படத்தில் நடித்திருக்கிறேன்.

**கேள்வி: மக்களுக்கான உங்களது செய்தி என்ன?**

**பதில்:** இன, மத, கட்சி மற்றும் நிற பேதங்களைக் கொண்டு மக்கள் பிரச்சினைகளை பார்க்கக் கூடாது. சரி என்றால் அதை சரியென்றும் தவறு என்றால் அதை தவறு என்றும் பார்க்கும் நினைக்கும் பழக்கத்தை மக்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இலங்கை மக்கள் இன்னும் அதற்கு பழகவில்லை. தமது இனத்தையோ, மதத்தையோ சேர்ந்த எவராவது தவறு செய்தாலும் அதை சரியென்று பார்க்கும் பழக்கமே நிலவுகிறது. எனவே, அந்த பழக்கங்களை மாற்றிக் கொண்டு பேதங்கள் எதுவும் பாராமல் சரியானதை சரியாகவும் பிழையானதை பிழையென்றும் பார்க்க மக்கள் பழகிக் கொள்ள வேண்டும்.

டிட்டோகுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாகரத்து ஒரு தொற்றுநோய்?



சில நோய்களைப் போன்று விவாகரத்தும் ஒருவரில் இருந்து மற்றவர்களுக்குப் பரவக்கூடியதாக இருக்கிறதாம். நம்புவதற்குக் கஷ்டமானதாகத்தான் இருக்கிறது. ஆனால், அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் நிச்சயப்படுத்திக் கூறுகிறார்கள்.

விவாகரத்து நண்பர்களுக்கு, சகபாடிகளுக்கு மற்றும் குடும்பத்தவர்களுக்குப் பரவக்கூடியதாகவுள்ளது. *Domino effect* என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகின்ற தொடர் தாக்கம் என்று விவாகரத்தின் தாக்கத்தையும் இந்த ஆராய்ச்சியாளர்கள் வர்ணித்திருக்கிறார்கள். உங்களது நெருக்கமான ஒரு நண்பர் அல்லது வேலைத்தலத்தில் சக ஊழியர்கள் விவாகரத்துச் செய்துகொள்ளும் போது நீங்களும் உங்கள் மனைவியை அல்லது கணவரை விவாகரத்துச் செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பு 75 சதவீதத்தினால் அதிகரிக்கிறது. உங்கள் நண்பரின் நண்பரின்

றது என்று கண்டறியப்பட்டிருக்கிறது.

விவாகரத்துச் செய்து கொண்ட நபர்கள் விவாகரத்து மனப்பாங்கைப் பரப்புவதில் நண்பர்கள் மீது மாத்திரமல்ல, நண்பர்களின் நண்பர்கள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். விவாகரத்துக்கான ஒருவருடைய மனப்போக்கு அவரின் நண்பரின் விவாகரத்து அந்தஸ்தில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. அது நண்பர்களின் நண்பர்களுக்கும் விரிவடைகிறது என்று மக்டெர்மெற் கூறியிருக்கிறார்.

உங்களுடன் தொடர்புடைய ஒருவர் அல்லது நெருக்கமாகப்

மணவாழ்க்கை முறிந்து விட்டால் கூட அது உங்களது மணவாழ்வில் முறிவு ஏற்படக்கூடிய சாத்தியத்தை மூன்றில் ஒரு பங்கினால் அதிகரிக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறியிருக்கிறார்கள். இதை இவ்வாரம் டெயிலி மெயில் பத்திரிகை செய்தியாக வெளியிட்டிருக்கிறது.

இந்தத் தாக்கத்தை 'கொத்தணி விவாகரத்து' *(Divorcet Clustering)* என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் வர்ணிக்கிறார்கள். நண்பர்கள் வட்டத்திற்குள் விவாகரத்துகள் இடம்பெறும் போது அந்த வட்டத்திற்குள் இருக்கக் கூடிய ஏனைய தம்பதியரும் தங்கள் சொந்த மணவாழ்க்கை உறவு முறை பற்றி தங்களுக்குள் கேள்விகளை எழுப்பும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது என்பது இவர்களின் அபிப்பிராயமாக இருக்கிறது.

மணவாழ்வில் முறிவு ஏற்பட்டு நாம் மனைவியை விட்டு அல்லது கணவரைவிட்டுப் பிரிந்து வாழும் போது சமூகம் எங்களைத் தவறாக நோக்கும் என்ற பயம் இருக்கிறதல்லவா? சமூகத்துக்கு முகங்கொடுப்பதில் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்குமல்லவா? அதனால், மணவாழ்வில் ஆயிரம் தான் முறுகல்கள், சிக்கல்கள் இருந்தாலும் சமாளித்து வாழ்வதற்கே இயன்றவரை நாம் முயற்சிக்கிறோம். ஆனால், நண்பர் ஒருவர் விவாகரத்துச் செய்யும் போது அந்தச் சமூகக் கறைபற்றிய பயம் கணிசமானளவுக்குக் குறைந்துவிடுகிறது. பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு பற்றிய அக்கறை தம்பதிகளைப் பிணைத்து வைத்திருந்தாலும் கூட, நண்பர்களின் விவாகரத்து எங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சக்தியைக் கொண்டிருக்கிறது.

1948 ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்காவின் நியூ இங்கிலாந்து நகரான ஃபிராமிங்ஹாமில் வாழ்ந்துவரும் 12 ஆயிரத்துக்கும் அதிகமான அமெரிக்கர் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது. றோட் ஐலண்டில் உள்ள பிறவுண் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த றோஸ் மக்டேர் மொற் தலைமையிலான ஆராய்ச்சியாளர்களினால் நடத்தப்பட்ட இந்த ஆய்வின் மூலம் ஒவ்வொரு விவாகரத்தும் நண்பர்கள் ஊடாக, குடும்பங்கள் ஊடாக, அலுவலகச் சகாக்கள் ஊடாக அதிர்வலைகளை ஏற்படுத்துகி

பழகுகின்ற ஒருவர் விவாகரத்துச் செய்தவராக இருப்பின் நீங்கள் விவாகரத்து செய்யக்கூடிய சாத்தியம் 75 சதவீதம் இருப்பதாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களிடம் அவதானிக்கப்பட்ட அம்சங்களில் இருந்து தெரிய வந்திருக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

உங்களது நண்பரின் நண்பர் விவாகரத்துச் செய்துகொண்டால் நீங்கள் விவாகரத்துச் செய்யக்கூடிய சாத்தியம் 33 சதவீதத்தினால் மாத்திரமே அதிகரிக்கிறதாம். குடும்ப உறுப்பினர்கள் மத்தியிலும் அலுவலக சகாக்கள் மத்தியிலும் இடம்பெற்றிருக்கக் கூடிய விவாகரத்துகளும் உங்களது மணவாழ்க்கை முறிவுக்கான சாத்தியத்தை அதிகரிக்கின்றன.

உங்களுக்குத் தெரிந்திருக்கக் கூடிய விவாகரத்துச் செய்து கொண்ட நபர்களின் எண்ணிக்கை எந்தளவுக்கு அதிகமானதாக இருக்கிறதோ அந்தளவுக்கு உங்கள் சொந்த மணவாழ்க்கையும் ஆபத்தை எதிர்நோக்கும். பிள்ளைகளைப் பெற்றெடுத்த தம்பதிகள் கூட இத்தாக்கத்திற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

## புகைப்படம் எடுக்கும்போது ஏன் பிடிக்கவில்லை?



பாலர் பாடசாலை மாணவர்களை ஆசிரியை ஒருவர் சுற்றுலாவுக்குக் கூட்டிச் சென்றார்.

பல இடங்களையும் சுற்றிப்பார்த்த மாணவர்களை பொலிஸ் நிலையம் ஒன்றுக்கும் ஆசிரியை அழைத்துச் சென்று காண்பித்தார்.

அங்கே பொலிஸாரினால் தேடப்படும் 10 குற்றவாளிகளின் புகைப்படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அவற்றை சிறார்களுக்கு காண்பித்த பொலிஸ் அதிகாரியொருவர் 'இந்தப் புகைப்படங்களில் இருப்பவர்களை நீண்ட காலமாக நாம் பல குற்றச்செயல்களுக்காகத் தேடி வருகிறோம். ஆனால் இதுவரை பிடிக்கமுடியவில்லை' என்று சொன்னார்.

அப்போது குறுக்கிட்ட ஒரு சிறுவன் கேட்டான்; இந்தப் படங்களுக்காக அவர்களைப் புகைப்படம் எடுக்கும்போது ஏன் பிடிக்கவில்லை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரத்தியேக வகுப்புகளும் ஏங்கும் பெற்றோர்களும்

இன்றைய கல்வியில் பிரத்தியேக வகுப்புகள் பிரபல்யமடைந்து வருவதால் பெற்றோரும் தமது பிள்ளைகளைப் பிரத்தியேக வகுப்புகளுக்கு அனுப்புவதில் அக்கறை காட்டி வருகின்றனர்.

பிள்ளைகள் கற்று, நாடறிந்த தலைவர்களாக மாறவேண்டும் என்ற நோக்குடன் அவர்களைப் பிரத்தியேக வகுப்புகளுக்கு அனுப்புவதால் ஏற்படுகின்ற பின் விளைவுகளையும் பாதிப்புகளையும் உணருவதில்லை.

பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்ற விளம்பரங்கள் மீது நம்பிக்கை கொள்ளும் பெற்றோர்கள் வீடு வந்து பிரத்தியேகமாக கற்பிக்க ஆசிரியர்களை நியமிக்கின்றனர். அவ்வாறான சிலரால், பிள்ளைகள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


தமது பிள்ளை வெளியே தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று வருவதால், பிரச்சினை ஏற்படும் என்பதால் வீட்டில் ஆசிரியர்களை வரவழைத்து பாடங்களைக் கற்பிப்பதன் மூலம் பிள்கைள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவார்கள் என்று பெற்றோர்கள் நம்பிக்கை வைக்கின்றனர். ஆனால், பிரத்தியேக வகுப்புகளினால் சிலவேளைகளில் பிள்ளைகளின் வாழ்க்கை பாழடைந்து விடுவதை அவர்கள் மறந்து விடுகின்றனர்.

பிரத்தியேக வகுப்புகளுக்கு ஆசிரியர்களை வரவழைப்பதன் மூலம் எதிர்கொண்ட சிரமங்கள் தொடர்பாகத் தாயொருவர் கூறுகையில்;

'எனக்கு ஒரு மகள் மாத்திரம் உள்ளதால் அவளின் கல்வி நடவடிக்கைகளில் நானும் உறுதுணையாகவே செயற்படுகிறேன். காலையில் மகளுடன் பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பிய பின்னர் மாலை நேர வகுப்புகளுக்கு அழைத்துச் செல்வேன்.

தொடர்ந்தும் இவ்வாறு வெளிப் பயணங்கள் மேற்கொள்வதில் நான் அதிகமாக சிரமப்படுவதை விட எனது பிள்ளைக்கும் ஓய்வு நேரம் இல்லை என்பதால் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை வீட்டிற்கு அழைத்து கல்வியைத் தொடரும் வழியை மேற்கொண்டேன்.

வீட்டுக்கு வந்து ஆசிரியர் கற்பிப்பதால் பாடசாலையில் சிறந்த புள்ளிகளைப் பெற்றா. தொடர்ந்தும் முன்னிலையில் நின்றாள்.



காலப்போக்கில் சாதாரணதரப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்த வேளை, பிள்ளைக்கு கல்விச் செயற்பாடுகளில் ஆர்வம் குறைந்து கொண்டு சென்றது. அத்தோடு குறிப்பிட்ட நாட்களைவிட மேலதிகமாக வகுப்புகளை நடத்தி வந்தனர். பாடத்திட்டங்களுக்கு அப்பாற்பட்ட விடயங்களை எல்லாம் கற்றுக்கொடுத்துள்ளார் என்பது பிள்ளையின் நடவடிக்கைகளின் மூலம் புலப்பட்டது.

சாதாரண பரீட்சை முடிவடைந்து பெறுபேறுகளில் பிள்ளையின் நிலை புலப்பட்டது. பிரத்தியேக வகுப்புகள் மேற்கொள்ளாத காலத்தில் சிறந்த புள்ளிகளைப் பெற்ற எனது பிள்ளை பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை எடுக்க வேண்டும் என்பதற்காகப் பிரத்தியேக வகுப்புகளை ஏற்பாடு செய்ததால் பரீட்சையில் சித்தியடையவில்லை' என தனது ஆதங்கத்தைக் கூறினார்.

தனியார் வகுப்புகளில் கல்வி கற்பது சிரமம் என்று நினைக்கும் பெற்றோர் பிரத்தியேக வகுப்புகளில் தனியாகத் தமது பிள்ளை கற்கும் போது எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை எண்ணிப்பார்ப்பதில்லை.

இது தொடர்பாக மற்றுமொரு தாயொருவர் கூறுகையில்; 'எனது பிள்ளைக்கும் சகோதரியின் இரு பிள்ளைகளை இணைத்து வீட்டில் வகுப்புகளை நடத்துவதற்கு ஆசிரியர் ஒருவரைத் தொடர்பு கொண்டேன்.

விபரங்கள் அனைத்தையும் அறிந்து கொண்ட பின்னர் மூன்று பிள்ளைகளையும் ஒன்றிணைத்து பாடம் கற்பிக்க முடியாது. தனித்தனியாக வந்து கற்பிப்பதாகக் கூறினார்' என்றார் அந்தத் தாய்.

வீடுகளில் தனியாக அறையில் கற்பிக்கும் போது, மாணவர்களுக்குப் பாடம் கற்பிப்பதுடன் பாலியல் தொடர்பான விடயங்களை இடையிடையே கூறி அவர்களின் மனதில் கெட்ட எண்ணங்களை ஏற்படுத்துகின்றனர்.

எனவே பிரத்தியேக வகுப்புகளை ஏற்படுத்தும் போது பெற்றோர் விழிப்புடனிருக்க வேண்டியதுடன், பிள்ளைகளைத் தனியறையில் வைத்து பிரத்தியேக வகுப்புகளை நடத்த வழிசமைக்காமல் திறந்த ஹோல்களில் தொடருவதற்கான வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும்.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கருச்சிதைவுகள் நிறைந்துவிட்ட நிலையில் பாலியல் தொற்று எப்படி இருக்கும்?

கருச்சிதைவுகள் இருக்குமென்றால் பாதுகாப்பான உடலுறவா நடக்கிறது என்று மனதில் கேள்வி எழத்தான் வேண்டும். இன்னும்கருவறைகள் கல்லறையாகிப் போன நிலையில் கட்டாயமாகவே எழும் என்பதில் ஐயமில்லை.கருச்சிதைவு பற்றி பத்திரிகைகளிலும் சமூகத்திலும் மிகவும் அதிகமாகவே பேசப்படுகின்றன. அதாவது மிகைப்படுத்தி அல்ல. உண்மையில் அவை அதிகரித்துவிட்ட நிலையை தான் குறிப்பிடுகின்றன.

கருச்சிதைவுகள் நிறைந்துவிட்டன என்றால் என்ன உண்மை.முன்னைய காலங்களில்தான் புராணங்களில் கண்ணால் பார்த்தால் கர்ப்பங் கொள்ளும் கதைகள் இருக்கின்றன.அவ்வாறு நாம் இப்போதும் கருத முடியாது. விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது.பாலியலை மையப்படுத்தியே தொலைக்காட்சி விளம்பரங்கள் தொடக்கம் அலைபேசிக்காணொளி செல்போன் வரை வந்துவிட்ட நிலையில் இளம் வயதினரை உணர்விழக்கச் செய்யும் விதமாகவே இவை யாவும் நகர்கின்றன.

இது இவ்வாறிருக்க பாலியல் நோய்கள் தொடர்பாக அறிந்து கொள்ள முடிவதில்லை. இங்கு உள்ள குறையாதென்றால் பாலியல் என்ற வரையறையில் தான் பாலியல் ரீதியாக பரவும் நோயின் நோயியல் காணப்படுகின்றது.பாலியல் ரீதியாக பரவும் நோயின் நோயியல் தொடர்பான கருத்துக்களை மக்கள் அறியவில்லை. ஆனால் சமூகத்தில் போதுமான அளவு பாலியல் சிந்தனை பரவியே உள்ளது.இங்கு பாலியல் ரீதியாக பரவும் நோயின் நோயியல் பற்றிய அறிவு மிகவும் பூச்சியம் என்றே கூறவேண்டியுள்ளது.பாலியல் நோய்த்தொற்று என்பது பாதுகாப்பான உடலுறவில் குறைக்கப்படுகின்றது. ஆணுறைகள், பெண் உறைகள் போன்றவற்றின் பயன்பாடும் சரியான பாவனை முறையும் அதிகமானவர்கள் அறியாத நிலையிலேயே உள்ளனர் என்ற எண்ணமே இங்கு உருவாகின்றது.

இவ்வாறான சாதனங்களை அவற்றை பயன்படுத்தும் உரிய முறையில் அல்லாமல் சாதாரணமாக பயன்படுத்தும் போது கர்ப்பம் உருவாகும் வாய்ப்பு உள்ளது என்றே கூறலாம்.இவற்றின் நம்பகத்தன்மை என்பன இங்கு செல்வாக்கு செலுத்துகின்றன. இவை பயன்படுத்தும் கிழிதல் மற்றும் சில சந்தர்ப்பங்களில் மிகையளவு இனப்பெருக்கச் சுரப்புக்கள் ஏற்படும் போது இவற்றினைத் தாண்டி நோய்க் கிருமிகள் மற்றும் விந்தணுக்கள் செல்ல வாய்ப்பு உள்ளது. இதைவிட சில வகை தயாரிப்பு மாதிரியூடாக கிருமி கடந்து செல்லும் தகவும் உள்ளது.

இவ்வாறு பாதுகாப்பு உறைகளிலுள்ளேயே எத்தனை பாதுகாப்பின்மை இருக்கிறது என்றால் கருச்சிதைவுகள் வழமையாகிவிட்டன. மறுதலையாக பார்க்கும் போது கர்ப்பம் தரிக்கப்பட்டுள்ளது.இன்னும் வெளிப்படையாக கூறுவதானால் பாதுகாப்பற்ற உடலுறவே நடைபெற்றுள்ளது.

எனவே நமது சமூகத்தில் தற்போது எல்லா வசதி வாய்ப்புகளும் அதிகரித்து விட்டன.

(எயிட்ஸ் கிருமிவரை) கலாசார சீரழிவுகள் மலிந்துவிட்டன.இந்த நிலையில் பாலியல் நோய்க்கான இனம்காணல் துரிதப்பட வேண்டும். அதாவது ஓர் சமூகத்தில் தொற்று நோய் பற்றி பார்த்தால் பனிக்கட்டி ஒன்று. நீரில் அமிழ்ந்து மிதக்கும் போது பார் பின் பெரும்பகுதி நீரில் அமிழ்ந்து காணப்படும்.இவ்வாரே நோய் இனம் காணப்படும் மக்கள் கூட்டம் நீரின் மேல் வெளிக்காணப்படும் பகுதியாகவும் இனம் காணப்படாத மக்கள் கூட்டம் நீரில் அமிழ்ந்து காணப்படும் பகுதியாகவும் தான் ஒப்பிடமுடியும்.




எனவே நோய் தொடர்பான இனம்காணல் மிக முக்கியமாக உள்ளது. இது மிகவும் உயிர்த்துடிப்புடன் அமையவும் வேண்டும். இனம் காணப்படும் போது தரவுகள் எதுவும் வெளியிடப்படமாட்டா. இரகசியமாகவே பேணப்படும்.இனம் காணப்படவறும் பட்சத்தில் ஒருவரால் பலர் தொற்றுக் ஆளாவதும் இன்னும் தாதியர்,ஆய்வுகூட பரிசோதகர்கள், சத்திர சிகிச்சை மருத்துவர்கள் போன்ற பலரும் எயிட்ஸ் நோயாளியை கையாளும் போது தாம் எடுத்துக் கொள்ளும் விஷேட பாதுகாப்பு நடவடிக்கையில் இருந்து தவறி சாதாரண நோயாளிகள் உடன் மேற்கொள்ளும் நடைமுறையை கையாளப்படும் போது இவர்களும் நோய்த்தொற்று ஆளாகும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.குருதிமாற்றீடு மற்றும் ஏனைய தொற்றல் ஏற்படக்கூடிய முறைகளின் ஊடாகவும் அநேகர் தொற்றுக்கு ஆளாதலை தவிர்க்க இது பெரிதும் உதவும்.

டாக்டர்
வெ.நாகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாக்சனின் மகனுக்கும் சரும நோய்...

பொப் இசை மன்னன் மைக்கேல் ஜாக்சனின் உடல் மற்றும் முகத்தின் நிறத்தை கோரமாக்கிய விடிலிகோ என்ற சரும நோய் தற்போது ஜாக்சனின் மகன் பிரின்ஸ் மைக்கேல்-1 க்கும் வந்துள்ளது.

மைக்கேல் ஜாக்சன் உயிருடன் இருந்தபோது முகம் மற்றும் உடலின் நிறம் திடீரென மாறத் தொடங்கியது. அலங்கோலமாக மாறியதால் அவரது முகமும் உடலும் நலிவடைந்து போனது. உடலின் கருமை நிறத்தை மறைக்க ஜாக்சன் செய்த ப்ளீச்சிங் கால்தான் இப்படி ஆனதாக அப்போது கூறினார்கள். ஆனால் உண்மையில் அவருக்கு வந்த விடிலிகோ என்ற சரும நோய்தான் இந்த அலங்கோலத்திற்குக் காரணம்.

ஜாக்சன் இதைக் கூறியபோது யாரும் நம்பவில்லை. இந்த நிலையில் தற்போது ஜாக்சனின் 13 வயது மகன் பிரின்ஸ் மைக்கேலுக்கும் இந்த சரும நோய் வந்துள்ளதால் குடும்பத்தினர் கவலை அடைந்துள்ளனர்.



சமீபத்தில் ஹவாய்க்குத் தனது தங்கை பாரிஸ், தம்பி பிரின்ஸ் மைக்கேல்-2 ஆகியோருடன் சென்றிருந்தான் பிரின்ஸ். அப்போது அவனது அக்குள் பகுதியில் வெள்ளைத் திட்டுகள் இருப்பதைப் பார்த்தனர் குடும்பத்தினர். முதலில் இது சூரிய ஒளியால் ஏற்பட்ட திட்டுகளாக இருக்கும் என சந்தேகித்தனர். ஆனால் மருத்துவ சோதனையில்தான் இது விடிலிகோ எனத் தெரியவந்தது. விடிலிகோ என்பது மரபு ரீதியாக வரும் நோயாகும். இது வந்தால் தோலின் நிறம் மொத்தமாக மாறிப்போய் விடும். உடலின் பொலிவே போய்விடும்.

தற்போது பிரின்ஸுக்கு இந்தப் பிரச்சினை வந்துள்ளதால் அவனது குடும்பத்தினர் கவலை அடைந்துள்ளனர். அதேசமயம், இப்போதாவது 'பிரின்ஸ் தான், மைக்கேல் ஜாக்சனின் வாரிசு என்பதை அனைவரும் புரிந்து கொள்ளட்டும்' என்று அவரது குடும்பத்தினர் கூறியுள்ளனராம்.

# இணையத்தளத்தில் 'பேய்' விற்பனை

ஓன் லைனில் சோப்பு,சீப்பு முதல் கணினி வரை வாங்கலாம்.பேயை வாங்க முடியுமா? என்னாது பேயா என்று பதற்றம் ஆகிவிட்டீர்கள்தானே.உண்மைதான்.

நியூசிலாந்து நாட்டை சேர்ந்த பெண் ஆவி உட்பரி (அவர் பெயரிலும் ஆவி) தன் வீட்டில் பேய்கள் இருப்பதாக பேய் ஓட்டும் பூசாரிகளை அழைத்து இரு குப்பிகளில் தண்ணீர் பிடித்து அதில் அடக்கி வைத்தார். 'இந்த குப்பிகளின் மூடியை மட்டும் திறந்து விடாதீர்கள் திறந்தால் நாங்கள் பொறுப்பல்ல மீண்டும் வீட்டை ஆவிகள் சுற்றி வரும். என்று பூசாரிகள் எச்சரித்து விட்டுச் சென்றனர். கணினி மூளையுள்ள இந்த பெண் ஒரு திட்டம் போட்டார்.இணையத்தளம் ஒன்றில் 'என்னிடம் இரு குப்பிகளில் ஆவிகள் உள்ளன, அவற்றை ஏலம் விடத் தயார். அதிக தொகை கேட்போருக்கு தரப்படும் என்று விளம்பரம் செய்தார்.

இதை படித்து விட்டு சிலர் பயந்தனர். ஆனால், ஏகப்பட்ட பேர் வரவேற்றனர்.மொத்தம் இரண்டு இலட்சம் பேர் ஏலத்தில் பங்கேற்றனர். மூன்று இலட்சம் ரூபா கொடுத்து எலக்ட்ரானிக் சிகரட் கம்பெனி உரிமையாளர் ஏலத்தில் எடுத்தார்.ஏலத்தில் விட்டதும் தான் உட்பரிக்கு நிம்மதியே வந்தது.



என் வீட்டில் அலைந்து கொண்டிருந்த வரை எனக்கு இந்த ஆவிகளால் தூக்கமே இல்லை.தினமும் ஏதாவது ஒரு அறையில் பொருட்களை அலங்கோலப்படுத்திவிடும். சில சமயம் அமைதியாக இருக்கும் என்னால் அவற்றுடன் நட்பாக போக முடியவில்லை குப்பிகளில் அடைத்த நாளில் இருந்து எந்த சத்தமும் இல்லை. ஆனால், குப்பிகளில் தண்ணீர் அலைந்து கொண்டே இருக்கும் ஆவிகள் படுத்தும் பாடு தான் என்று உணர்ந்தேன்' என்றார் உட்பரி.

இதில் நகைச்சுவை என்னவென்றால் இதை ஏலத்தில் வாங்கியவர் உள்ளூர் பத்திரிகைகளில் ஒரு விளம்பரம் கொடுத்துள்ளார். அதில் என்ன சொல்லியுள்ளார் தெரியுமா? என்னிடம் இரு ஆவிகள் உள்ளன. அவற்றை எந்த வழியில் பயனுள்ளதாக செய்ய முடியும் என்பதற்கு நீங்கள் ஐடியா தர முடியுமா? தந்தால் பரிசு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகில் புதைக்கப்பட்டுள்ள 10 கோடி கண்ணிவெடிகள்

நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதில் தற்போது கண்டறியப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தினால் ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களை பாதுகாக்க முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.ஹோலோகிரபிக் ராடார் முறை மூலம் நிலக்கண்ணி வெடிகளை மிக துல்லியமாக கண்டறிந்துவிட முடியும் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

ஐ.நா.வின் புள்ளிவிபரங்களின் படி உலகில் எண்பதுக்கும் அதிகமான நாடுகளில் புதைக்கப்பட்டுள்ள சுமார் 10 கோடி வரை[யி]லான நிலக்கண்ணிவெடிகளை கண்டறிந்து அவற்றை அகற்றும் முயற்சிகளில் மெட்டல் டிடெக்டர் எனப்படும் உலோகங்களை கண்டறியும் கருவிகளே பயன்படுத்தப்படுகின்றன.

நிலக்கண்ணிவெடிகளில் சிக்கி ஒவ்வொரு மாதமும் சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் ஒன்றில் கொல்லப்படுகின்றனர்.அல்லது உடல் அவயங்களை இழந்து ஊனமடை[]கின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

உலோகங்களை கண்டறியும் கருவிகள் பொதுவாக எந்த .வொரு உலோகத் துண்டுகளையும் கண்டறியக் கூடியவை என்பதால் பாதிப்புகளை ஏற்படுத்தாத உலோகத்துண்டுகளை கண்டறிவதிலேயே சுமார் 90 வீதமான வளங்களையும் நேரத்தையும் பொதுவாக அவை வீணடித்து விடுகின்றன.



ஆனால் தற்போது லேசர் கதிர்களைப் பாய்த்து பொருளொன்றின் முப்பரிமாண விம்பத்தை கண்டறியும் ஹோலோகிரபிக் ராடார் என்ற முறையை பயன்படுத்தி பிளாஸ்ரிக் உள்ளிட்ட எந்தவகையான பொருட்களால் ஆன நிலக்கண்ணிவெடிகளையும் மிக இலகுவாக கண்டறிந்துவிடமுடியும் என சர்வதேச விஞ்ஞானிகள் குழுவொன்று தெரிவித்துள்ளது.

வழமையான ராடார் கருவிகள் நிலத்தினுள்ளே கதிரை அனுப்பி அது தரும் சமிக்ஞைகளை பெறுகின்றன.

ஆனால், பத்தாயிரம் யூரோக்கள் பெறுமதியான ராஸ்கான் ரக ராடார் கருவிகள் கதிர்களை தொடர்ச்சியாக அனுப்புவதன் மூலம் நிலத்தில் புதைந்துள்ள பொருட்களின் தெளிவான நிழற்படத்தை நாம் காண வகை செய்கின்றன.

பேராசிரியர் கொலின் வின்ட்ஸர் தனது ஓய்வு நேரத்தில் சுமார் 12 வருட காலத்தை இந்த கருவியை கண்டுபிடிக்கும் முயற்சியில் செலவிட்டு வந்துள்ளார்.

இந்தக் கருவியுடன் ஏனைய தொழில்நுட்பத்தையும் சேர்த்துக்கொள்வதன் மூலம் கண்ணிவெடி அகற்றும் பணியில் மனிதர் ஈடுபட தேவையில்லாத தானியங்கி முறையையும் கைக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறுகிறார்.

# ஆண்களுக்கு எச்சரிக்கை!

ஷொப்பிங் போகும் ஆண்களே மிகவும் கவனம் அதனால் ஒரு முக்கிய பிரச்சினையை சந்திக்க நேரிடும் அதுதான் மலட்டுத்தன்மை.

இதை ஒரு ஆராய்ச்சி மூலம் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.கடைக்குப் போய் சாமான் வாங்கப் போனால் எப்படி மலட்டுத்தன்மை வரும் என்று கேள்வி கேட்கலாம்.

அதற்குப் பதில் தெரிய தொடர்ந்து படியுங்கள்.

வர்த்தக வளாகங்கள்,வணிக நிறுவனங்கள்,ஜவுளிக் கடைகள் உள்ளிட்டவற்றுக்குப் போகும்போது அங்குள்ள காசாளர்களினால் தரப்படும் ரசீதுகளில் அதாவது அந்தத் தாள்களில் பிஸ்ஃபெனால் ஏ (bisphenol a (bpa)) என்ற ஆபத்தான பொருள் அடங்கியிருக்குமாம். அதை தொடும் ஆண்களுக்கு [பெரும்பாலும் பொருட்களை பெண்கள் வாங்கினாலும் பர்ஸைப் பறி கொடுக்கும் பொறுப்பு ஆண்களுக்குத்தானே வந்து சேருகிறது] அந்த பொருள் நமது உடல் மூலமாக ஊடுருவி நமது செக்ஸ் ஹோமோன்களை செயலிழக்க வைத்து விடுமாம்.

இந்த வேதிப் பொருளை பிரிண்டர்களில் பயன்படுத்தப்படும் மையில் கலந்து விடுகிறார்கள். அதாவது பளிச் சென எழுத்துகள் தெரிய வேண்டும் என்பதற்காக இவ்வாறு பி.பி.ஏ.வை மையில் கலக்கிறாக்கள்.ஆனால் இது ஆண்களின் பர்ஸை மட்டுமல்ல எல்லாவற்றையும் காலி செய்து விடும் ஆபத்து இப்போது தான் தெரியவந்திருக்கிறது.

இந்த வேதிப் பொருள் அடங்கிய ரசீதை வாயில் வைப்பது,கையால் தொடுவது உள்ளிட்டவற்றின் மூலமாக நமது உடலுக்குள் இது போகிறதாம்.

இது குறித்து பெர்லினைச் சேர்ந்த பிராங் சோமர் என்பவர் கூறுகையில், இது ஆண்களின் செக்ஸ் ஹோமோன்களை காலி செய்து விடும் சக்தி படைத்தது.




ஷொப்பிங் செல்லும் பழக்கம் அதிகம் உடைய ஆண்களுக்கு இந்தப் பிரச்சினை வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.எழுச்சியின்மை,விறைப்புத்தன்மை குறைவு போன்றவற்றுக்கும் இது இட்டுச் செல்லும்.

இது மட்டுமல்லாமல் மார்பகப் புற்று நோய், இதய நோய்கள், உடல் பருமன், இரத்த அழுத்தம் உள்ளிட்டவையும் கூட வரும் வாய்ப்பு உள்ளது. இந்த வேதிப் பொருளுக்கு அமெரிக்கா, கனடாவில் தடை செய்யப்பட்டுள்ளது என்றார்.

எனவே ஆண்குலமே ஷொப்பிங் போகும்போது மிகவும் கவனம் இல்லாவிட்டால் இழக்க நேரிடும் பணத்தோடு, ஆண் குணத்தையும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடுகுக்குள் கடல்

மா.சின்னு

சில சொற்களில்,சில அடிகளில் பல பொருட்களை அடக்கிக் காட்டுவதே செய்யுளாகும்.அதனால்தான் நன்னூல் இயற்றிய பவணந்தியார்.

**'சில்வகை யெழுத்தில் பல்**
**வகைப் பொருளைச்**
**செவ்வென் ஆடியிற் செறித்து**
**இனிது விளக்கித்**
**திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்'**
**(நன் .18)**

என்றார்.இலக்கணத்துக்குச் சொன்னாராயினும் இந்த நூற்பா இலக்கியத்துக்கும் பொருந்தும்.

தண்டியலங்காரம் தந்த தண்டி என்னும் புலவர் பொருளணிகளில் ஒன்றாகிய சங்கீரண அணிக்குப் பின்வரும் இலக்கணம் தருகிறார்.

**'மொழியப் பட்ட அணி பலதம்**
**முன்**
**தழுவ உரைப்பது சங்கீரணம்மே'**

தன்மையணி முதலாகச் சொல்லப்பட்ட அணிகளில் பலவும்(அதாவது இரண்டிறந்த பல அணிகள்)ஒரே செய்யுளில் பொருந்தும்படி உரைப்பது சங்கீரணம்.

வள்ளுவர்,தம் திருக்குறள் ஒன்றில் ஓரடிக்குள் ஒன்பது வகையான பொருள் தோன்றப் பாடியுள்ளார்.

**'இலனென்னும் எவ்வம் உரை**
**யாமை யீதல்**
**குலனுடையான் க்ண்ணே யுள'**
**(223)**

'யான் வறியன் என்று இரப்பான் சொல்லும் இளிவரவைத் தான் பிறர்கண் சொல்லாமையும் அதனைத் தன்கண் சொன்னார்க்கு மாற்றாது ஈதலும் இவை இரண்டும் உளவாவன குடிபிறந்தான் கண்ணே' என்று உரை கூறிய பரிமேலழகர் தம் காலத்துப் பிறர் செய்ததாகக் கிடைத்த மூவகை உரைகளைப் பின்வருமாறு எடுத்துக் காட்டுவார் (இளிவரவு-இழிவு)

இனி, 'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்' என்பதற்கு,அவ்விளி வரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தல் எனவும் அதைப் பின்னும் பிறனொருவன்பால் சென்று அவன் உரையா வகையில் கொடுத்தல் எனவும் யான் இதுபொழுது பொருளுடையேன் அல்லேன் எனக் கரப்பார் சொல்லும் இளிவரவைச் சொல்லாது கொடுத்தல் எனவும் உரைப்பாரும் உளர்' எனப் பிறர் மூவகையில் பொருள் கொண்டதைக் குறிப்பிடுகிறார்.இதனால் இக்குறளின் முதலடி,பழைய உரையாசிரியர்கள் நான்கு வகையாகப் பொருள் கொள்ளும் அளவுக்கு விரிந்த பொருளை உள்ளடக்கி உள்ளதெனத் தெரிகிறது.

வை.மு.கோபால கிருஷ்ணமாசாரியார், 'இலன் என்னும் எவ்வம் உரையாமை யீதல்' என்ற இவ்வடிக்கு மேலும் ஐந்துவகைப் பொருள் காண்கிறார்.

தன்னிடம் வந்து யாசிப்பவன் எவனோ அவன் தன்னிடம் வந்து யாசிப்பவர்க்கு 'இல்லேன்' என்ற இழிமொழியைச் சொல்லாமல் அவர் வேண்டுவன எல்லாம் கொடுக்கும்படி அவனுக்கு நிரம்பப் பொருள் கொடுத்தல் என்று முன்னைய உரையாசிரியர்கள் போல 'இலன்' என்பதைத் தன்மை ஒருமையாக்கிக் கொண்டு உரை க்கூறினார்.பிறகு இனி, 'இலன்' என்பதை ஆண்பால் படர்க்கை ஒருமை வினைமுற்றாகக் கொண்டு இவன் இல்லாதவன் என்னும் நிந்தைச் சொல்லை யாசகனைக் குறித்துத் தான் சொல்லாமல் ஈதல் என்றும் இவன் இல்லாதவன் என்னும் இகழ்சொல்லைத் தன்னைக் குறித்து யாசகனாவது பிறராவது சொல்லாதபடி ஈதல் என்றும் தன்னிடம் வந்துபோன யாசகனைக் குறித்தும் பிறர் இவன் இல்லாதவன் என்று சொல்லாமல் பொருளால் மிக்கவன் என்று சொல்லும்படி ஈதல் என்றும் இவன் நம் இல்லினிடத்தே வந்துள்ளான் என்று இகழ்ந்து கூறாமல் ஈதல் என்றும் கூறலாம் என்று கிருஷ்ணமாசாரியார் ஐந்து வகையில் பொருள் கூறினார்.

தண்டியலங்கார ஆசிரியர் சங்கீரண அணிக்கு எடுத்துக்காட்டாகத் தந்த பாடலில் மிளகுக்குள் ஆறு கடலைப் புகட்டினால் போல் ஆறு அணிகளைச் செறித்துப் பாடினார்.திருவள்ளுவரோ, **'இல்லனென்னும் எவ்வம் உரையாமை யீதல்'** என்ற ஓரடிக்குள் கடுகுக்குள் கடலைப் புகட்டினாற்போல் ஒன்பது வகைப் பொருளைப் புகட்டிப் பாடினார்.

இலக்கிய சுவை...

# சங்க இலக்கியத்தில் பங்காளிச் சண்டை

ஆ.திருஆரூரன்

பண்டைத் தமிழகத்தில் மன்னராட்சி நடைபெற்ற காலங்களில் பெருநில வேந்தர்களும் குறுநில மன்னர்களும் மண்ணாசை காரணமாகவோ பெண்ணாசை க்காரணமாகவோ தங்களுக்குள் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போர் புரிந்து வந்துள்ளனர்.அதுபோல் வேதாயாதிகள்(உடன் பிறந்தோர்)ஒருவரை ஒருவர் நாடாளும் உரிமைக்காகப் போராடிய வரலாறுகளும் தமிழகத்தில் நிகழ்ந்துள்ளன.அதற்கு எடுத்துக்காட்டாக புறநானூற்றுப் பாடல்களுள் ஒன்றை இங்கு காண்போம்.

அண்ணன் தம்பிகளான சோழன் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் சோழ நாட்டின் இருவேறு பகுதிகளில் ஆட்சி செய்து வந்த போதிலும் அவ்வப்போது தங்களுக்குள் தொடர்ந்து போர்புரிந்து வந்துள்ளனர். ஆவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்துவந்த நெடுங்கிள்ளி,அண்ணன் நலங்கிள்ளியுடன் நடந்த போரில் தோற்று உறையூரில் வந்து தங்குகிறான்.அதை அறிந்த நலங்கிள்ளி உறையூரை முற்றுகையிடுகிறான்.சோழன் குடியைச் சேர்ந்த இருவரும் தம்முள் பகைகொண்டு மாறிமாறிப் போர் செய்துகொண்டு இருப்பதைக் கண்டு நெஞ்சம் பதைத்த கோவூர்க்கிழார் என்னும் புலவர் இருவரையும் சந்து செய்யும் (சமாதானம்)பொருட்டுப் பாடியுள்ள ஒரு பாடல் இங்கு நினைவு கூரத்தக்கது.


'நலங்கிள்ளி! உன்னால் எதிர்க்கப்படுபவன் பனம்பூ மாலையைச் சூடிய சேரனும் அல்லன்.வேப்பம்பூ மாலையைச் சூடிய பாண்டியனும் அல்லன்.உன்னுடைய மாலையும் ஆத்திப்பூமாலை.உன்னோடு போர் செய்பவன் அணிந்துள்ள மாலையும் ஆத்திப் பூமாலையே!இருவரில் ஒருவர் தோற்றாலும் தோற்கப்போவது என்னவோ உமது சோழர் குடியே!உங்கள் இருவருக்கும் நடைபெறும் போரில் இருவரும் வெற்றி பெறுவது என்பது இயற்கையில் நடக்கக் கூடிய செயலன்று.அதனால் உம்முடைய செயல் சோழர் குடிக்குத் தகுதியுடைய செயல் அல்ல.

நீங்கள் இருவரும் உங்களுக்குள் நிகழ்த்தும் இப்போரைக் கண்ணுறும் உம்மையொத்த அரசர்களுக்கு(சேர,பாண்டியர்க்கு)உடல் குலுங்கும்படியான(உடல் பூரிக்கும்படியான)நகைப்பை உண்டாக்கும்.எனவே உங்களுக்குள் நிகழும் இப்போரை உடனடியாக நிறுத்துங்கள்' என்று அறிவுரை கூறும் வகையில் ஒரு பாடலைப் பாடியுள்ளார்.அப்பாடல் இதுதான்.

**'இரும்பனை வெண்**
**டோடு மலைந்தோன் அல்**
**லன்**
**கருஞ்சினை வேம்பின்**
**தெரியலோன் அல்லன்**
**நின்ன கண்ணியும் ஆர்மி**
**டைந்தன்றே நின்னோடு**
**பொருவோன் கண்ணியும்**
**ஆர்மிடைந்தன்றே**
**ஒருவீர் தோற்பினும்**
**தோற்பது உம் குடியே**
**இருவீர் வேறல் இயற்கை**
**யும் அன்றே-அதனால்**
**குடிப்பொருளன்று நும்**
**செய்தி கொடித்தேர்**
**நும்மோரன்ன வேந்**
**தர்க்கு**
**மெய்ம்மலி உவகை செய்**
**யும் இவ்விகலே'**
**(புறம் -45)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசாலி எறும்புகள்



பூச்சி இனங்களில் புத்திசாலியானது எறும்புகள், மக்கள் சமூகமாக இணைந்து வாழ்வது போல் எறும்புகளும் கூட்டமாக வாழ்கின்றன. இவற்றின் நரம்புகள் நன்கு வளர்ச்சி பெற்றுக்காணப்படும். எறும்புகளுக்கு மூளை இருப்பதால் சிக்கலான நேரத்திலும் யோசித்துச் செயல்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். எறும்புகளின் முக்கிய உணர் உறுப்பு கொம்புகள் தான். அதன்மூலம் தொட்டுணரவும் வாசனையை அறியவும் முடிகிறது. எறும்புகள் சந்திக்கும்போது கொம்புகளால் ஒன்றையொன்று தொட்டுக் கொள்வதைக் காணலாம். இதன் மூலம் அவை செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்றன. சில எறும்புகளுக்குப் பார்வை கிடையாது. பார்வை உள்ள எறும்பினங்களுக்கு நிறங்களைக் கூட பிரித்தறியும் ஆற்றல் உண்டு. ஒரு புற்றில் ஆயிரக்கணக்கான எறும்புகள் வசித்தாலும் அவை ஒரே இனத்தைச் சேர்ந்தவை அல்ல. பல்வேறு வகையான எறும்பினங்கள் ஒன்றாக வசிக்கின்றன. ராணி எறும்பு முட்டையிடுவதைத் தவிர வேறு வேலை எதுவும் செய்யாது. அதுவும் ஒரே ஒரு முறைதான் ஆண் எறும்புடன் கூடும். உணவு சேகரிப்பது, இளம் எறும்புகளைப் பராமரிப்பது போன்ற வேலைகளை வேலைக்கார எறும்புகள் கவனித்துக் கொள்கின்றன. போர் வீரர் எறும்புகள் புற்றைப் பாதுகாக்கின்றன.




அரபு நாடுகளில் ஒட்டக பந்தயம் என்பது மிகவும் பிரபலமானது.சில சமயம் ஒட்டக பந்தயம் செய்பவர்களின் உயிர் ஆபத்துகளில் முடிகிறது.எனவே இப்போதெல்லாம் மனிதர்களுக்கு பதில் ரிமோட் கன்ரோல் ரோபோவை உட்காரவைத்து போட்டிகள் நடத்துகின்றனர்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 41

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | 5 |
| 6 | 7 | 8 | ■ | 9 | 10 |
| 11 | ■ | 12 | 13 | ■ | ■ |
| 14 | 15 | 16 | ■ | 17 | 18 |
| ■ | 19 | ■ | 20 | 21 | 22 |
| 23 | 24 | ■ | 25 | 26 | 27 |

**இடமிருந்து வலம்**

1. அழிக்க முடியாத சொத்து
4. இலங்கை தற்போது இந்த இறைச்சியை இறக்குமதி செய்யவுள்ளது.
6. சக்தி என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
9. மாடிகளில் இருப்பது (திரும்பியுள்ளது)
12. இது இல்லாதோர் பிரச்சினை தற்போது அதிகரித்துள்ளது
14. இசைக்கருவிகளில் ஒன்று (திரும்பியுள்ளது)
17. ஐம்பூதங்களில் ஒன்று
20. புஷ்பம் (திரும்பியுள்ளது)
23. குழு என்றும் சொல்லலாம் (திரும்பியுள்ளது)
25. சோற்றை இப்படியும் சொல்வர் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. குழப்பம் என்றும் சொல்லலாம்
2. இது போனால் சொல்லு போகும் (தலைகீழ்)
3. அறிவு (குழம்பியுள்ளது)
4. நூறு லட்சங்கள் சேர்ந்தால் வருவது
5. சிலர் இது சுமத்துவார்கள் (தலைகீழ்)
15. பிடிவாதம் (குழம்பியுள்ளது)
17. ஒரு நிறம்
18. போர் என்றும் சொல்லலாம் (தலைகீழ்)
20. வீதிக்கு போடுவது (தலைகீழ்)

பெயர் : ....................................................

முகவரி : ....................................................

....................................................

### குறுக்கெழுத்துப்போட்டி - 39 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. பிரேசில் | 1. பிதா |
| 5. ஆ | 2. ரேகை |
| 6. பதாகை | 3. பசில் |
| 9. மடை | 5. ஆடை |
| 11. பல்லி | 9. மல்லிகை |
| 14. சிலை | 12. பதி |
| 16. பதில் | 14. சினம் |
| 19. கானல் | 15. முல்லை |
| 22. கைது | 18. பத்து |
| 24. சமுகம் | 21. சகா |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**எம்.ரி.எம்.அமீன்,**
**19/2, புவுக் கொட்டுவ,**
**ஹேகொட, பதுளை.**

### பாராட்டுப்பெறுவோர்

01. எம்.பி. அகிலன், 39, கல்லூரி வீதி, திருகோணமலை.
02. ஞான. செந்தமிழ் செல்வன், குப்பிளான் தெற்கு, ஏழாலை.
03. ஆர். அஜந்த், குருவி கொல்ல, மடுல்சிமை.
04. வி.செல்வநாயகம், சிவன்கோவில் வீதி, புத்தூர்.
05. ருஷாம் அன்வர், 55/A, நியூ கங்காணங்கொடை வீதி, சீனன்கோட்டை, பேருவளை.

*உங்கள் விடைகளை*
**Saturday மெயில்**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15**
*என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...*

## தெரிந்துகொள்ளுங்கள்!



* பூனைக்கு மொத்தம் 30 பற்கள் உள்ளன.
* மதுரையில் உள்ள ஆயிரம் கால் மண்டபத்தில் 985 தூண்களே உள்ளன.
* ராஜநாகத்தின் ஆயுட்காலம் 14 ஆண்டுகள்.
* அஸ்வத்தம் என்ற சொல் அரச மரத்தைக் குறிக்கிறது.

## விடுகதை

1.வளைந்து நெளிந்து போனாலும் வழி காட்டத் தவறமாட்டான். அவன் யார்?

2.பூட்டுச் சாவி இல்லாத பெட்டி; காசு கொடுத்து வாங்கும் பெட்டி. அது என்ன?

3.அடித்தாலும் அழமாட்டான்; அடிப்பவரை கண்கலங்க வைப்பான். அவன் யார்?

4.மளிகைக் கடையில் இருப்பாள்; வீடுகள் தோறும் நறுமணம் வீசுவாள். அவள் யார்?

5.காலையில் கூவும் பட்சி; கந்தன் கொடியில் காணும் காட்சி. அது என்ன?

6.வினா இல்லாமலே ஒரு விடை அது என்ன?

7.காலில்லாத பந்தலைப் பார்க்க பார்க்க விநோதம். அது என்ன?

8.வீட்டுக்குள் நடனம் புரிவான். மூலையிலே ஒடுங்கிக் கிடப்பான். அவன் யார்?

9.படீரென்று வெடிக்கும் பட்டாசு அல்ல; பறந்து போகும் அது விமானமும் அல்ல. அது என்ன?

1.சாலை
2.தீப்பெட்டி
3.வெங்காயம்
4.சாம்பிராணி
5.சேவல்
6.பணிவிடை
7.ஆகாயம்
8.துடைப்பம்
9.பலூன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்நகரை ஆக்கிரமிக்கும் தென்னிலங்கை வாகனங்கள்



நாட்டில் மூன்று தசாப்த காலமாக நிலவிய யுத்தம் முடிவுக்கு வந்துள்ளதைத் தொடர்ந்து தற்போது யாழ்நகரம் இயல்பு நிலைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றது.தினந்தோறும் தென்னிலங்கையிலிருந்து ஏராளமான பொதுமக்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகிறார்கள்.இதனால் யாழ்நகரம் வாகனங்களால் நிரம்பி வழிகின்றது.

ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் யாழ்நகரின் பிரதான வீதிகள் அனைத்திலும் மக்கள் வெள்ளம் போலக் காட்சியளிக்கின்றது.இதில் கணிசமானளவு மக்கள் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

தென்னிலங்கையிலிருந்து வருபவர்கள் தமது வாகனங்களை நிறுத்துவதற்கு யாழ் நகரில் இடமில்லை. எங்கே எப்படி நிறுத்த வேண்டுமென்ற அறிவுறுத்தல்களும் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இதனால் யாழ்நகரம் சன நெரிசல்களுக்கு அப்பால் வாகன நெரிசல்கள் நிறைந்த இடமாக மாறி வருகின்றது.இதனைக் கட்டுப்படுத்துவதற்கு எவரும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. யாழ்நகரிலுள்ள கஸ்தூரியார் வீதி மற்றும் காங்கேசன்துறை வீதி போன்ற ஒரு சில வீதிகள் ஒருவழிப்பாதைகளாக மாற்றப்பட்டு அங்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.ஆனால் குடாநாட்டைச் சேர்ந்த வாகனச் சாரதிகள் இந்த நடைமுறைகளுக்கு உட்பட்டுச் செயற்படுகின்ற போதிலும் தென்னிலங்கையிலிருந்து வருகின்ற வாகனச் சாரதிகள் பலர் இந்த நடைமுறைகளை மீறியே செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது.காரணம் அவர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் இல்லை.உரிய இடங்களில் வீதிக் குறியீடுகள் காட்சிப்படுத்தப்படவில்லை.

கடமையில் ஈடுபடுகின்ற போக்குவரத்துப் பொலிஸாரும் இவர்களைக் கட்டுப்படுத்துவதில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

மேலும் ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்நகருக்குள் அன்றாடம் கனரக வாகனங்களின் பிரசன்னம் அதிகமாகிக் கொண்டு செல்கின்றது.இதற்கு ஏற்றாற் போல நகர அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது.ஆனால் இவ்விடயத்தில் எவரும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

யாழ்நகரிலுள்ள வடிகால்கள் மிக நீண்ட காலத்திற்கு முன்னர் அமைக்கப்பட்டவை.அப்போது ஏ-9 நெடுஞ்சாலை மூடப்பட்டிருந்தமையால் கனரக வாகனங்கள் குடாநாட்டிற்கு வருகை தராத நிலையில் இந்த வடிகால்களைப் புனரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கவில்லை.தற்போது அதன் தேவை ஏற்பட்டுள்ளது.

ஆனால் நகரிலுள்ள வடிகால்களும் அவற்றின் மேல் போடப்பட்டுள்ள சிமெந்துத் தட்டுகளும் உடையக் கூடிய அபாய நிலையிலேயே உள்ளன.குறிப்பாக நகரின் பிரதான வீதிகளில் ஒன்றாகிய கஸ்தூரியார் வீதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக உள்ள வடிகாலின் இரண்டு சிமெந்து மூடிகள் உடைந்து பெரிய குழிகள் ஏற்பட்டுள்ளன.இதனால் எந்த வேளையிலும் விபத்து ஏற்படக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் நிறைவடைவதற்கு முன்னர் யாழ்.மாநகர சபையுடன் தொடர்பு கொண்டு இந்த வடிகால்களின் அபிவிருத்தி தொடர்பாக கேட்டபோது, ‘தற்போது நிதிவளமும் இல்லை.குடாநாட்டில் கனரக வாகனங்களின் போக்குவரத்தும் இல்லை’ என்று கூறிய அப்போதைய மாநகரசபை நிர்வாகம் இந்த வடிகால்கள் திருத்தம் செய்யப்படவேண்டுமென்பதையும் ஏற்றுக் கொண்டிருந்தது.

2009 மே மாதம் யுத்தம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்படுவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையும் யாழ்.மாநகர சபையிடம் கேட்டபோது, ‘நிச்சயமாக இந்த வடிகால்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்; ஆனால் நிதிப்பிரச்சினை உள்ளது’ என்று கூறியிருந்தது.

தற்போது ஏ-9 பாதை திறக்கப்பட்டு சுமுகமான முறையில் போக்குவரத்துகள் நடைபெறுகின்ற வேளையில் கூட யாழ்நகரின் வடிகால்களைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படாமை குறித்து சமூக ஆர்வலர்கள் பலரும் கவலையை வெளியிட்டிருக்கிறார்கள்.


குறிப்பாக தென்னிலங்கை மக்களை ஏற்றி வருகின்ற வாகனங்கள் தென்னிலங்கையிலிருந்து பொருட்களை ஏற்றி வருகின்ற ஹொன்ரயினர் வாகனங்கள் தென்னிலங்கைக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்ற பெரிய நடுத்தர வாகனங்கள் யாழ்நகரிலுள்ள வீதிக் கரையோரமாக சிலவேளை வடிகால்களுக்கு மேல் நிறுத்தப்படுகின்றன.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் வடிகால்கள் உடைந்து விபத்துகள் ஏற்படக்கூடிய அபாய நிலை ஏற்படுகின்றது.இவ்விடயங்களில் உரிய அதிகாரிகள் அக்கறையெடுக்க வேண்டும் என்பதே மக்களின் இன்றைய வேண்டுகோளாக இருக்கின்றது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தைச் ‘சின்ன சிங்கப்பூராக’ மாற்றுவோம் என்ற தொனிப்பொருளுடன் புறப்பட்டிருக்கின்ற அதிகாரிகள் முதலில் யாழ்ப்பாணத்தை ‘யாழ்ப்பாணமாக’ மாற்ற வேண்டும் என்பதே இந்தப் பொதுமக்களினதும் சமூக ஆர்வலர்களினதும் கோரிக்கையாக உள்ளது.


என்.பிருந்தாவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முழு நேர ரஜினி படமாகும் சுல்தான்

அனிமேஷன் படமாக எடுக்கப்பட்டு வந்த ரஜினிகாந்தின் சுல்தானை முழுநீள ரஜினி படமாக மாற்றியுள்ளனராம். இதனால் பட்ஜெட்டும் பல கோடிகள் கூடியுள்ளதாம் சௌந்தர்யா. ரஜினி காந்த் தனது ஆக்கர் ஸ்ருடியோஸ் மூலமாகத் தயாரித்து வரும் அனிமேஷன் படம் சுல்தான். இப்படத்தை முழுநீள அனிமேஷன் படமாக எடுத்து வந்தார் சௌந்தர்யா. ஆனால், படம் முடிவடைவதாகத் தெரியவில்லை. இடையில் பல சிரமங்கள். இந்த நிலையில் தற்போது இப்படத்தை முழுமையான ரஜினி படமாக எடுக்கவுள்ளார் சௌந்தர்யா. இன்னொரு விடயம் படத்தை முழுமையாக ரஜினிகாந்தே டேக் ஓவர் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதன் மூலம் இப்படம் முழுமையான ரஜினி படமாக மாறுகிறது. அதாவது அனிமேஷன் படமாக இது இருக்காது. மாறாக,வழக்கமான பிரமாண்டமான ரஜினி படமாக இது இருக்கும். படத்தின் இடையிடையே அனிமேஷன் காட்சிகள் வருவது போல மாற்றவுள்ளனராம். மேலும், படத்தின் பட்ஜெட்டும் பல கோடிகள் கூடியுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால் ரஜினி



காந்தின் மிகப் பிரமாண்டமான படங்களில் ஒன்றாக சுல்தான் மாறவுள்ளது. எந்திரன் தொடர்பான வேலைகள் முழுமையாக முடிந்த பின்னர் சுல்தானுக்கு முழு வீச்சில் நேரம் கொடுக்கவுள்ளாராம் ரஜினி.

Saturday சினிமா

# கைவிடப்பட்ட ஜேம்ஸ் பொன்ட் படம்

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட 23 ஆவது ஜேம்ஸ் பொன்ட் படம் கைவிடப்பட்டுள்ளது. இந்தப் படம் மீண்டும் படப்பிடிப்புக்குச் செல்ல நீண்டகாலமாகும் எனவும் கூறப்படுகிறது. ஜேம்ஸ் பொன்ட் வேடத்தில் டேணியல் கிரேக் 3 ஆவது முறையாக நடிக்கும் 23 ஆவது ஜேம்ஸ் பொன்ட் படம் குறித்து கடந்த ஏப்ரல் மாதம் செய்திகள் வெளியாகின.இந்த நிலையில்,படத்தைத் தயாரிக்கும் எம்.ஜி.எம்.நிறுவனம் நிதிப் பிரச்சினையில் தள்ளாடி வருவதால் படத்தயாரிப்புப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில், தற்போது படத்தையே இரத்துச் செய்துவிட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது குறித்து பொன்ட் படத் தயாரிப்புக் குழுவில் இடம்பெற்றுள்ள ஒருவர் கூறுகையில்; படம் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதாக படக் குழுவினருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. போதிய நிதியில்லாததே இதற்குக் காரணம் என்றார். சாம் மெண்டிஸ் இப்படத்தை இயக்குவதாக இருந்தது. தற்போது படம் கைவிடப்பட்டுள்ளதால் மீண்டும் இது எப்போது தொடங்கப்படும் என்பது தெரியவில்லை. ஆனால், நெடு நாட்களாகும் என்று கூறுகிறார்கள். எம்.ஜி.எம்.நிறுவனம் 3.7 பில்லியன் டொலர் கடனில் மூழ்கியுள்ளதாம்,



மாசி–அர்ஜுன், அர்ச்சனா குப்தா

# ஒரு எழுத்தில் பெயர்

ஒரு எழுத்தில் படத்துக்குப் பெயர் சூட்டுவது தமிழுக்குப் புதிதல்ல. ரஜினி படத்துக்கு தீ என்று ஒரே எழுத்தில் பெயர் வைத்திருக்கிறார்கள். கே.வி. ஆனந்த் இயக்கத்தில் ஜீவா நடிக்கும் படத்தின் பெயர் கோ.கோ என்றால் பசுவையும் குறிக்கும் அரசனையும் குறிப்பிடும். இதில் கே.வி. ஆனந்தின் கோ எதைக் குறிப்பிடுகிறது என்பது தெரியவில்லை. சுந்தரா டிராவல்ஸ்,மீசை மாதவன் படங்களைத் தயாரித்த தங்கராஜ் 'ஐ' என்ற பெயரில் ஒரு படத்தைத் தயாரிக்கிறார். தான் தயாரித்த படங்கள் அனைத்தும் சுமாராகப் போனதால் வந்த கோபமா தெரியவில்லை. இந்தப் புதிய படத்தைத் தயாரிப்பதுடன் இயக்கவும் செய்கிறார். நல்லவேளை தங்கராஜ் நடிக்கவில்லை. இறுதியாக மாஸ் ஹீரோ விஜயகாந்தை வைத்து எடுத்த படமும் மண்ணைக் கவ்வியதால் இந்த முறை முழுக்க புதுமுகங்களைக் களமிறக்கத் தீர்மானித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் பிடியில் காவல்காரன்



விஜய் நடிக்கும் படத்துக்கு புதுச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இந்த சிக்கல் குறித்து விசாரித்து அறிக்கை தர நீதிமன்றம் பொலிஸ்துறைக்கு ஆணை பிறப்பித்துள்ளது. விஜய் நடித்துவரும் காவல்காரன் படத்தை சித்திக் இயக்கி வருகிறார். இந்தப் படம் மலையாளத்தில் சித்திக் இயக்கிய பொடிகாட் படத்தின் ரீமேக்- மலையாளத்தில் பொடிகாட் படத்தை தயாரித்த ஜானிதோமஸ், பொடிகாட் படத்தின் அனைத்து உரிமைகளும் என்னிடமே உள்ளது. அப்படியிருக்க அந்தப் படத்தை சித்திக் எப்படி தமிழில் ரீமேக் செய்யலாம் என்று நீதிமன்ற படியேறியிருக்கிறார். பொடிகாட் படத்தின் கதை, திரைக்கதை, வசனம் முதற்கொண்டு இயக்கம் வரை அனைத்தும் என்னுடைய கற்பனையில், உழைப்பில் உருவானது. இதை எந்த மொழியில் ரீமேக் செய்யவும் உரிமை உள்ளது என்பது சித்திக்கின் வாதம். ஜானிதோமஸின் மனுவை விசாரித்த நீதிமன்றம் இது குறித்து விசாரித்து உரிய தகவலை தாக்கல் செய்யுமாறு காவல்துறைக்கு ஆணை பிறப்பித்துள்ளது. கதையின் உரிமையை அதை உருவாக்கியவருக்கா? இல்லை அதைப் படமாக எடுக்க பணம் போட்டவருக்கா? இன்னும் சில நாட்களில் தெரிந்துவிடும்.

## வந்தே மாதரம் வருகிறது



மம்முட்டி, அர்ஜுன், சினேகா நடித்திருக்கும் வந்தே மாதரம் இம்மாதம் திரைக்கு வருகிறது. ஹென்றி இந்தப் படத்தைத் தயாரித்துள்ளார். அறுவடை என்ற பெயரில் அரவிந்த் ராஜ் இயக்கிய படம்தான் இன்று வந்தே மாதரமாகப் பெயர் மாறியிருக்கிறது. தமிழ், மலையாளம் இரு மொழிகளில் தயாராகியிருக்கும் இந்தப் படத்தில் மம்முட்டியும் அர்ஜுனும் பொலிஸ் அதிகாரிகளாக நடித்துள்ளனர். சினேகாவுக்கு விமானி வேடம். முக்கியமான கதாபாத்திரங்களின் தன்மை முக்கியமாக இருந்தாலும் படத்தில் பேசப்படுவது விவசாயிகளின் பிரச்சினைகளாம். வந்தே மாதரத்தைத் தயாரித்திருக்கும் ஹென்றி பாரதி கண்ணம்மா, மறுமலர்ச்சி போன்ற நல்ல படங்களைத் தயாரித்தவர். படத்தை இயக்கியிருக்கும் அரவிந்த் ராஜ், ஊமை விழிகள், செந்தூரப்பூவே என்று பிரமாண்டத்தில் அசத்தியவர். இவர்கள் இணைந்து உருவாக்கியிருக்கும் படம் என்பதால் வந்தே மாதரத்தில் உருப்படியான விடயங்களைக் கண்டிப்பாக எதிர்பார்க்கலாம்.

## கமல் படத்தில் த்ரிஷாவின் அம்மா

த்ரிஷாவின் அம்மா உமா கிருஷ்ணன் த்ரிஷா அளவுக்கு கோடம்பாக்கத்தில் பிரபலம். த்ரிஷாவை ஒப்பந்தம் செய்யவரும் இயக்குநர்கள். அநேகமாக எல்லோரும், 'நீங்களும் நடிக்கலாமே' என்று உமா கிருஷ்ணனிடம் கேட்டிருக்கிறார்கள். அழகாக நாயகியின் அம்மா போட்டி வைத்தால் சந்தேகமில்லாமல் இவருக்குத்தான் முதல் பரிசு. நிற்க விடயத்திற்கு வருவோம். பலர் கேட்டும் சினிமாவில் நடிக்க மறுத்து வந்த உமா கிருஷ்ணன் கமலுக்காக தனது பிடிவாதத்தைத் தளர்த்திக் கொண்டாராம். கமல், த்ரிஷா நடித்து வரும் மன்மதன் அம்பு படத்தில் ஒரு சிறிய வேடத்தில் உமா கிருஷ்ணனும் நடிப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மன்மதன் அம்பு படத்தின் பெரும்பாலான காட்சிகள் சொகுசுக் கப்பலொன்றில் படமாக்கப்பட்டு வருகிறது. இதில் கமல், த்ரிஷாவுடன் மாதவன், சங்கீதா ஆகியோரும் நடிப்பது குறிப்பிடத்தக்கது.

## நான்கு பேருடன் அஜித்

எதையும் வெளிப்படையாகச் சொல்வதில் மட்டுமல்ல, செய்வதிலும் தானொரு தலை என்பதை அடிக்கடி நிரூபிப்பவர்கள் அஜித். கௌதம் படம் கைவிடப்பட்டதால் வெங்கட் பிரபு இயக்கத்தில் அஜித் நடிக்கிறார். இந்தச் செய்தி ஊடகங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டாலும் சம்பந்தப்பட்ட அஜித்தோ, வெங்கட் பிரபுவோ, தயாரிப்பாளர் துரை தயாநிதியோ இது குறித்து இன்னும் அதிகாரபூர்வமாக ஏதுவும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில், வெங்கட் பிரபு இயக்கும் படம் குறித்து மேலும் சில சுவாரஷ்ய செய்திகள் கசிந்துள்ளன. வெங்கட் பிரபு படத்தில் கதை இருக்கிறதோ, இல்லையோ நான்கு நாயகர்கள் கண்டிப்பாக இருப்பார்கள். அஜித் படத்திலும் இது தொடர இருக்கிறதாம். தான் நடிக்கும் படத்தில் தன்னைத் தவிர யாரும் கதைகூட தெரியக்கூடாது என்று சொல்லும் முன்னணி நாயகர்களுக்கு மத்தியில் நான்கைந்து பேருடன் படத்தை பங்கி[illegible] அஜித் [illegible] கிறார் என்றால் [illegible]

## எந்திரனுக்கு 570 கோடி



எந்திரன் படத்தின் பட்ஜெட் ஏறக்குறைய 300 கோடியைத் தொடும் என்று படம் ஆரம்பிக்கும் முன் கூறப்பட்டது. படப்பிடிப்புத் தொடங்கிய பிறகு இது 360 கோடியாக உயர்ந்தது. சன் பிக்சர்ஸ் தயாரிப்புப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஒரே நாளில் பட்ஜெட் 450 கோடியாக பட்ஜெட் எகிறியது. இம்மாதம் எந்திரனின் பாடல்கள் வெளியிடப்படுகின்றன. இந்நிலையில், படத்தின் பட்ஜெட் குறித்து காற்றுவாக்கில் ஒரு செய்தி பரப்பப்பட்டு வருகிறது. அது படத்தின் பட்ஜெட் 570 கோடியைத் தாண்டிவிட்டது என்பதே. இந்தப் புதிய நம்பரைப் பார்த்துப் பலர் வாய் பிளந்தாலும் நமட்டுச் சிரிப்புடன் கடந்து செல்கிறார்கள் கோடம்பாக்க அனுபவசாலிகள். எந்திரன் படத்தைக் குறித்து வரும் இன்னொரு தகவல் ஜப்பான் மட்டுமன்றி, சீனாவிலும் படத்தை வெளியிடத் திட்டமிட்டுள்ளார்களாம். இதனால் படத்தின் பிரிண்டுகளின் எண்ணிக்கை மூவாயிரத்தைத் தொடும் என்கிறார்கள். முதலில் எந்திரன் இசை வெளியீட்டு வழிவை துபாயில் நடத்தத் திட்டமிட்டிருந்தனர். தற்போது துபாயை தவிர்த்து மலேசியாவைத் தேர்வு செய்திருக்கிறார்கள். தமிழக இரசிகர்களைக் கவர இங்கேயும் ஒரு ஆடியோ வெளியீட்டு விழா நடத்தப்படுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் வசந்தம்



## கிராம வீதிகளுக்குள்ளும் நுழையுமா?

நகரங்களின் 'இதயங்கள்' என்று சொல்லப்படுகின்ற கிராமங்களின் வளர்ச்சியில் சமூக அக்கறையுள்ள அதிகாரிகள் எவருமே கூடுதல் நாட்டம் செலுத்துவதாகத் தெரியவில்லை. இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் வானையும் விஞ்சி உலக சாதனைப் படைத்துக் கொண்டிருக்க அதிகாரிகளின் 'கடைக்கண்' பார்வைபடாத கிராமப் புறங்கள் அடிப்படை வசதிகள் உட்பட 'மின்னொளி' யும் இன்றி இருளிலேயே மூழ்கிப் கிடப்பது விசனிக்கத்தக்கதாகும்.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை மூன்றில் ஒரு பகுதி தொடர்ந்தும் இருளிலேயே மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு சுமாராக 34 சதவீதப் பகுதிகளில் மின்சார விநியோகம் இடம்பெற்றிருக்கவில்லையென மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

சுன்னாகத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் மூலம் குடாநாட்டில் 66 சதவீத மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றது என அந்த அதிகாரி தெரிவித்தார். இவ்வாறு விநியோகிக்கப்படும் மின்சாரம் கிராமப் புறங்களில் சொற்ப வீதமே கிடைக்கின்றன.

அடிநிலை மக்கள் முதல் அதியுயர் அதிகாரிகள் வரை 'வடக்கின் வசந்தம்' என்று முணுமுணுப்பதைக் காண



முடிகின்ற அதேநேரம், இந்த 'வசந்தம்' கிராமப்புறங்களைத் தழுவ மறுப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

தற்போது இத்திட்டத்தின் மூலம் சில பகுதிகளுக்கு மின்னிணைப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பினும் அங்கு ஓரிரு வீதிகளுக்கு அவை ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையையும் காணமுடிகின்றது. உரிய அதிகாரிகளை மக்கள் நெருங்கிக் கேட்கும் போதெல்லாம், 'உங்களுக்கும் வடக்கின் வசந்தம் கட்டாயம் வீசும், பொறுமையாக இருங்கள்' என்ற பதில் தான் அவர்கள் வாயிலிருந்து வருவதாகப் பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றன.

பெரும்பாலான வீதிகளில் வீதிவிளக்குகள் பொருத்தப்படாமலும் சில இடங்களில் அவை இருந்தும் ஒளிர விடப்படாமலும் இருக்கின்றமையைக் காணமுடிகின்றது. இது தொடர்பாக அராலி மத்தியில் வசிக்கும் ஒரு பலசரக்குக் கடை முதலாளி கருத்துத் தெரிவிக்கையில்;

'எங்கள் வீதிக்கு மின்விளக்குகள் இருந்தும் அவை ஒளிர்வதில்லை. எத்தனையோ தடவைகள் உரியவர்களின் கவனத்திற்கு இதனை நாம் எடுத்துச் சென்றும் அவர்கள் இவ்விடயத்தில் அசமந்தப் போக்கையே காட்டுகின்றனர்.

அண்மையில் கொட்டைக்காடு வைத்தியசாலையில் அவசர நிலையிலிருந்த ஒரு நோயாளியை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஏற்றிச் செல்வதற்காக வந்துகொண்டிருந்த 'அம்புலன்ஸ் வண்டி' குறிப்பிட்ட வைத்தியசாலையின் வீதி தெரியாது பாதை மாறிச் சென்றது. வீதிவிளக்கு அங்கு இருந்திருக்குமாயின் இந்நிலைமை ஏற்பட்டிருக்காது' என்றார்.

அதேபோன்று மற்றோர் முதியவர் கருத்துத் தெரிவிக்கையில்;

'வடக்கின் வசந்தம் பல அபிவிருத்தித் திட்டங்களைச் செய்து வருகின்றது தான். இத்திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களுக்கு மின்னிணைப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றன. எங்கள் கிராமத்திலும் இந்த வசந்தம் வீசியதென்றும்' எங்கள் வீதிக்கு அது வரவில்லை. எங்கள் வீதிக்கு மின்னிணைப்பைப் பெற்றுத் தாருங்கள் எனக் கிராம அலுவலரைக் கேட்டால், எமக்கு ஒதுக்கிய நிதி இவ்வளவு தான் என்கிறார்கள். நாங்களும் அந்த வசந்தத்தைச் சுவாசிக்கக் கூடாதா?' என்று அந்தப் பெரியவர் ஆதங்கத்துடன் கூறினார்.

இவ்வாறு இருளில் மூழ்கிக் கிடக்கும் கிராமப் புறங்கள் மற்றும் வீதி விளக்கின்றிக் காணப்படும் வீதிகள் என்பனவற்றிற்கு இந்த 'வடக்கின் வசந்தம்' திட்டம் மூலம் 'மின்னொளி' பாய்ச்சப்படுமா? என்று அங்கலாய்க்கின்ற அப்பாவிப் பொதுமக்கள் வாழ்விலும் இந்த வசந்தம் 'பெருவசந்தமாய்' வீசுமா? அவர்களும் ஏனையோரைப் போன்று வாழ்வதற்குப் பல்வேறு வகையான அபிவிருத்தித் திட்டங்களை முன்வைக்குமா? இந்த வினாக்குறிகள் 'வியப்புக்குறிகளாக' மாறி அவர்கள் வாழ்விலும் வியத்தகு மாற்றங்கள், ஏற்றங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

எஸ்.ரூபனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...




# முத்தையா முரளிதரன்

சர்வதேச அளவில் இலங்கை கிரிக்கெட் அணியின் பல வெற்றிகளுக்கு காத்திரமான பங்களிப்பை நல்கிய முத்தையா முரளிதரனே இவ்வார நாயகனாவார்.

இலங்கை கிரிக்கெட் அணி 1996 உலகக் கிண்ணக் கோப்பையை தனதாக்கும் வரையில் உலகக் கிரிக்கெட் வலையமைப்பில் அமைதியான ஒரு இடத்திலேயே இருந்து வந்துள்ளது. அதுவரையில் முக்கிய வெற்றிகளை ஈட்டி பிரபலமானதொரு அணியாக உலக அரங்கில் வலம் வரவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் அதாவது 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிக்கு இலங்கை அணி தம்மை தயாராக்கிக் கொண்டிருந்த காலப்பகுதி அதாவது 1992 இல் உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி முடிவடைந்த நிலையில்தான் முரளிதரன் இலங்கை அணியில் இணைந்து பல வெற்றிகளுக்கு காரணகர்த்தாவாகி தற்பொழுது ஓய்வு பெறவுள்ளதாக அறிவிப்பு விடுத்துள்ளார்.

இலங்கைத் தீவின் கண்டி மாநகரின் நத்தரன் பொத்த கிராமத்தில் முத்தையா – லக்ஷ்மி தம்பதிகளுக்கு 1972 ஏப்ரல் 17 ஆம் திகதி மகனாகப் பிறந்தவர் தான் முரளிதரன். தந்தை சி.முத்தையா பிரபல பிஸ்கட் உற்பத்தி நிறுவனமான லக்கிலான்ட் நிறுவனத்தின் உரிமையாளர் ஆவார்.

கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்த நிலையிலேயே முரளியின் கிரிக்கெட் வாழ்க்கைக்கு அத்திபாரம் இடப்பட்டுள்ளது.

தனது 9 ஆவது வயதில் பாடசாலை அணிக்காக கிரிக்கெட்டில் இணைந்து கொண்ட முரளி ஆரம்பத்தில் வேகப் பந்து வீச்சாளராகத் தனது திறமையை வெளிப்படுத்திய நிலையில் பாடசாலை அணியின் பயிற்றுவிப்பாளர் சுனில் பெர்னாண்டோவின் அறிவுரைக்கு அமைவாக தனது பந்து வீச்சு முறையை சுழற்பந்து வீச்சாக மாற்றி அமைத்துக் கொண்டார்.

அந்த வகையில் முரளிதரனின் பெருவளர்ச்சிக்கு முக்கிய காரணியாக இருந்தவர் சுனில் பெர்னாண்டோ என்று கூறிக்கொள்ளலாம்.

தனது பாடசாலைக் கல்விக் காலத்தில் சிறப்பாக விளையாடி பாடசாலை மட்டப் போட்டிகளில் நூறுக்கும் அதிகமான விக்கெட்டுகளை கைப்பற்றியதன் பயனாக 1990 ஆம் ஆண்டில் பாட்டா நிறுவனத்தால் வழங்கப்படும் 'பாட்டா ஆண்டின் சிறந்த பாடசாலை துடுப்பாட்ட வீரர்' என்ற விருதினைப் பெற்றுக் கொண்டார்.

இந்த விருதே முரளியின் கிரிக்கெட்டிற்கு நாடளவில் கிடைத்த முதலாவது அங்கீகாரமாகும்.

பின்னர் தனது பாடசாலைக் காலம் நிறைவுற்றதன் பின்னர் தமிழ் யூனியன் மற்றும் தடகள அணிகளுக்காக 1991–1992 காலப்பகுதியில் விளையாடிய நிலையில் இலங்கை அணிக்காக தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை அணிக்காக 1992 இல் முதல் டெஸ்ட் துடுப்பாட்டப் போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கொழும்பு பிரேமதாச விளையாட்டரங்கில் விளையாடினார்.

ஆனால் தனது முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியை 1993 ஆகஸ்ட் 12 இல் இந்திய அணிக்கு எதிராக பிரேமதாச அரங்கில் விளையாடினார்.

அன்றைய காலப்பகுதியில் ஆரம்பித்த முரளிதரனின் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை 1996இல் உலகக் கிண்ணத்தை வெற்றியீட்டியதன் மூலம் மேலும் மிளிரத் தொடங்கியது.

உலகக்கிண்ணக் கோப்பையை இலங்கை கைப்பற்றுவதற்கு முரளியின் பங்கும் முக்கியமானதாகும்.

இந்நிலையில் இந்திய மலர் மருத்துவமனை அதிபர் டாக்டர் ராமமூர்த்தியின் மகள் மதிமலரை 2005 மார்ச் 21 இல் திருமணம் செய்து கொண்ட முரளிக்கு 2006 ஜனவரியில் ஆண்குழந்தை பிறந்தது. இலங்கை அணியின் பல வெற்றி

களுக்கு காத்திரமானவராக இருந்த முரளியின் தூஸ்ரா பந்துவீச்சில் 2004 ஆம் ஆண்டில் சர்ச்சை எழுந்தது.

ஆனால் பின்னர் நிபுணர்களினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அது சட்டரீதியில் அங்கீகரிக்கப்பட்டது.

இவ்வாறு பல தடைக்கற்களை தாண்டி பல சாதனைகளை தனதாக்கிய முரளி டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அதிகூடிய விக்கெட்டுகளை ஈட்டியவர் என்ற பெருமையையும் தனதாக்கினார்.

இதுவரை 131 டெஸ்ட் போட்டிகளிலும் 334 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியுள்ள முரளி 22 போட்டிகளில் 10 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.


இவ்வாறான திறமைகளையும் பெருமைகளையுமுடைய முரளிதரனின் ஓய்வு பெறும் அறிவிப்பு உலகளாவிய அவரது ரசிகர்களை தவிப்புக்குள்ளாக்கியுள்ளது.


முரளிதரனின் திறமையுடன் கூடிய மேலும் பல வீரர்கள் தொடர்ந்தும் இலங்கை அணிக்காக உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது அவாவாகும்.

**யோ.நிமல்ராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணக்கும் பத்திரிகை



ஜேர்மனியில் வெளியிடப்பட்டிருக்கும் ஒரு பத்திரிகையில் அச்சிட்ட எழுத்துக்களோ, படங்களோ கிடையாது. ஆனால் அந்த இதழின் ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு விதமாக மணக்கிறது.

பெர்லினில் இருந்து வெளிவரும் 'மோனோ குல்ட்டு' ஒரு கலைப் பத்திரிகை. ஒவ்வொரு வாரமும் ஓர் ஓவியக் கலைஞர் அல்லது திரைப்படக் கலைஞரை அடிப்படையாக வைத்து கட்டுரைகளை வெளியிடுவது இப்பத்திரிகையின் வழக்கம். அந்த வகையில் நோர்வே நாட்டு வாசனை ஆராய்ச்சியாளரும் கலைஞருமான சிஸல் டொல்லாஸை அடிப்படையாகக் கொண்டு ஓர் இதழை வெளியிட முடிவு செய்தனர். அதில் சிஸலின் பணியை வாசகர்கள் உணரச் செய்யவும் திட்டமிட்டனர்.

அதற்காக 'மைக்ரோஎன்காப்சுலேசன்' என்ற தொழில்நுட்பத்தை அவர்கள் பயன்படுத்தினர். அதில் சிஸல் உருவாக்கிய வாசனைகள் ஒவ்வொரு பக்கத்திலும் மணக்கின்றன. அது 'பளிச்' சென்று வாசகர்களைக் கவர வேண்டும் என்பதற்காக இதழில் வார்த்தைகளையோ, படங்களையோ இடம்பெறச் செய்யவில்லை.

பத்திரிகை வாசகர்கள் பக்கங்களை இலேசாகத் தங்கள் விரலால் உரசினால் உடனே நறுமணம் எழும்பும். குறிப்பிட்ட பத்திரிகையின் வாசகர் ஒருவர் கூறுகையில்;

'ஒரு பத்திரிகையில் உங்களின் விருப்பமான பகுதி, மணத்துடன் வந்தால் அது அசத்தலான விடயம் தான்' என்கிறார்.

# சுருட்டக் கூடிய ரி.வி.

ரி.வி.யைப் பாயைப் போல சுருட்ட முடியுமா என்று கேட்டால், 'இதென்ன அபத்தமான கேள்வி?' என்பீர்கள். ஆனால் அப்படி சுருட்டி வைக்கக் கூடிய டி.வி.சந்தைக்கு வரும் காலம் வெகு தொலைவில் இல்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள்.


பின்லாந்து நாட்டின் 'மில்லேனியம் டெக்னொலஜி பிரைஸ்' புதிய கண்டுபிடிப்புக்கான 'நோபல் பரிசாக' கருதப்படுகிறது. அந்த விழாவுக்கு அழைக்கப்பட்டுச் சென்றார் இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ரிச்சர்ட் பிரண்ட். அங்கு தான் அவர் சுருட்டக்கூடிய தொலைக்காட்சி பற்றிய விபரத்தைத் தெரிவித்தார். தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சியின் மூலம் அம்மாதிரியான தொலைக்காட்சி விரைவில் சாத்தியம் ஆகும் என்கிறார் இவர்.

'பிளாஸ்டிக் மின்னணுப் பொருட்கள் தற்போது முக்கியமான ஆய்வு விடயங்களாக அமைந்திருக்கின்றன. வருங்காலத்தில் இத்துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெறுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. நவீன 'எம்பி3 பிளேயர்களிலும்' நவீன செல்போன்களிலும் ஏற்கனவே ஒளி உமிழும் 'ஆர்கானிக் டையோடுகள்' பயன்படுத்தப்படுகின்றன. அவற்றைக் கொண்டு சுவரில் ஒட்டக் கூடிய ரி.வி.யைத் தயாரிக்கலாம். குறைந்த மின்சக்தியைப் பயன்படுத்தும் விளக்குகளையும் உருவாக்கலாம்' என்கிறார் ரிச்சர்ட்.

இந்த சுருட்டக்கூடிய தொலைகாட்சி மிக மெல்லியதாக இருப்பது, குறைந்த மின்சக்தியைப் பயன்படுத்துவதோடு அல்லாமல், அவற்றின் படக்காட்சிகள் பிரகாசமாகவும் துல்லியமாகவும் இருக்கும் என்றும் ரிச்சர்ட் தெரிவிக்கிறார்.



## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# செயற்கை கண்



மனித உறுப்புகளுள் மிக முக்கியமானது கண்.இதிலுள்ள 'கார்னியா' எனப்படும் விழி வெண்படலத்தின் மூலமே உலகில் நடக்கும் அத்தனை சம்பவங்களையும் மனிதன் பார்த்து ரசிக்கிறான்.சிலருக்கு பிறவியிலேயோ அல்லது விபத்தின்போதோ கார்னியா பாதிக்கப்பட்டு பார்வை இழப்பு ஏற்படுவதுண்டு.

உலகம் முழுவதும் சுமார் 4.9 மில்லியன் பேர் கார்னியா குறைபாடு உடையவர்கள் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.இவர்களுக்கு உதவும் விதமாக பிளாஸ்டிக்கால் ஆன செயற்கை கார்னியாவை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கி இருக்கின்றனர்.

ஜேர்மனியில் உள்ள பிரான்ஹோபர் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஜோச்சிம் ஸ்டோர்ஸ்பெர்க் என்பவர் இந்த செயற்கை கார்னியாவை வடிவமைத்துள்ளார்.ஹைட்ரோபிக் பாலிமர் என்ற பொருள் மூலம் இந்த கார்னியா உருவாக்கப்பட்டுள்ளது.இந்தப் பொருளானது கண் மருத்துவத்தில் நீண்ட காலத்திற்கு செயலாற்றக் கூடியது.

முதலில் பல்வேறு வகையான சிறப்பு பாலிமர்கள் செயற்கை கார்னியாவில் பூசப்படுகின்றன.பின்னர் அதன்மேல் சிறப்பு புரோட்டீன்கள் பூசப்படுகின்றன.இந்த புரோட்டீன்கள் கார்னியாவைச் சுற்றி உள்ள செல்களைத் தூண்டி பார்வையை ஏற்படுத்துகின்றன.இந்தக் கார்னியாவை பயன்படுத்தக் கூடிய வகையில் வடிவமைக்க இன்னும் 3 ஆண்டுகள் தேவை என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மரபணு சோதனை மூலம் இனி மனித வாழ்நாளைச் சொல்ல முடியும்

மரபணுக்களை வைத்து மிக விரைவிலேயே மனிதனின் இறப்பு நேரத்தையும் ஆயுட் காலத்தையும் முன் கூட்டியே சொல்லிவிட முடியும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

இது குறித்து அமெரிக்காவின் பொஸ்டன் மெடிக்கல் சென்டரில் உள்ள நியூ இங்கிலாந்து செண்டினெரியன் ஸ்டடி மையம் விரிவான ஆய்வை நடத்தியது.

நீண்ட காலம் வாழும் 1,000 பேரின் ஜீன்களை (மரபணுக்கள்) மையமாக வைத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது. அதில் நீண்ட காலம் வாழ்வோரிடையே வழக்கமாகக் காணப்படும் 150 ஜீன் ஜோடிகள் மாற்றம் செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஜீன்களின் ஆரோக்கியம், செயற்பாட்டை வைத்து ஒருவர் எத்தனை காலம் வாழ முடியும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டனர். இதில் 77 சதவீத வெற்றி கிடைத்துள்ளது.

ஒருவரின் ஆயுட் காலத்தை நிர்ணயிப்பதில் ஜீன்கள் முக்கிய பங்கு வகித்தாலும் சுற்றுச்சூழல், அவர் வாழும் சூழல் ஆகியவையும் முக்கிய பங்கு வகிப்பதை நாம் மறக்கக் கூடாது என்கிறார் இந்த ஆராய்ச்சி நிதியுதவி வழங்கிய ஏஜிங் டிவிசன் ஆப் ஜீரியாட்ரிக்ஸ் மையத்தைச் சேர்ந்த வினிபிரட் ரோஸ்னி.

நீண்ட நாள் வாழ உதவும் ஜீன்கள் உடலில் இல்லாதவர்களும் சிறப்பான வாழ்க்கை முறை, உடற் பயிற்சி மூலம் தங்கள் வாழ் நாட்களை அதிகரித்துக் கொள்ள முடியும் என்பதும் இந்த ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

முக்கியமாக உணவுக் கட்டுப்பாடு, சரியான உணவு, உடற்பயிற்சி, உடல் எடையைக் கட்டுப்படுத்துதல், எல்லா சூழல்களிலும் மனதை ஒரே நிலையில் வைப்பது போன்ற மிக முக்கியம் என்கிறார் ரோஸ்னி.

இதற்கிடையே சீனாவில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் நீண்ட நாள் வாழ்வோரின் உடலில் குறிப்பிட்ட சில இரசாயனங்கள் அதிக அளவில் இருப்பது தெரியவந்துள்ளது. குறிப்பாக சீரம் செலினியம், மேக்கனீஸ், இரும்பு, தாமிரம் ஆகியவை அதிகளவில் இருந்ததாக ஆய்வு தெரிவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# அன்பின் உருவம்



அந்தக் கடிதத்தை அவ்வளவு அவசரப்பட்டு எழுதி விட்டேனோ என்ற எண்ணம் ராதாவுக்கு இப்போதுதான் அவளது மூளையில் உதித்தது. ஆனால், அந்தக் கடிதம் எவ்வகையிலாவது எழுதப்பட வேண்டிய கடிதம்தான். அக்கடிதம் எழுதிய நாளில் இருந்து இன்னும் பதில் வந்து சேரவில்லை. கடிதம் எழுதி இன்றோடு ஐந்து நாட்களாகி விட்டன.

எங்கிருந்துதான் அவளுக்கு இவ்வளவு தைரியம் வந்தது என்று அவளுக்கே தெரிந்து கொள்ள இயலவில்லை. 'என் பக்கத்து வீட்டுப் பையனும் 28 வயது வாலிபம் நிரம்பியவனான கண்ணனை விட்டுப் பிரிந்துவாழ என்னால் முடியவே முடியாது' என்று கடிதத்ததில் எழுதி தனக்கு நிச்சயம் செய்த மாப்பிள்ளைக்கு அனுப்புகின்ற தைரியம்.

பக்கத்து வீட்டுக் கண்ணனை கண் பார்வை இல்லாதவன் என்று எப்படித் தெரிவிப்பது என நீண்ட நேரமாக யோசித்துக் கொண்டிருந்தாள். கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தவளாய் 'கண்ணன் அவனது பெயரில் மட்டுமே கண்' என்று எழுதி முடித்தாள்.

மாப்பிள்ளையின் பதில் கடிதத்தினை எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற இந்நேரத்தில் அவளுக்கு தனது சிறிய வயதில் நிகழ்ந்த அந்த சோகமயமான நாள் ஞாபகத்திற்கு வந்தது. ஒருநாள் அடைமழை பெய்து கொண்டிருந்த சமயம் ராதா தண்ணீரிலே விளையாட வாசற்படியை விட்டு கீழே இறங்கினாள். வெள்ளிக் கட்டி போன்ற தன் சின்னக் கால்கள் தெரிய பாவாடையை மேலே தூக்கிக் கொண்டு ராதா நீரில் காலைத்தூக்கி வைத்திருக்க வேண்டும்.

அப்போது, கண்ணன் தூரத்தில் நின்றிருந்தான். எதுவும் சரியாக நினைவில் இல்லை. சிறிய வயதில் நடந்த நிகழ்ச்சியல்லவா. ஆனால், திடீரென்று வெட்டித் தெறித்த மின்னல் ஞாபகத்தில் இருக்கின்றது. ராதா கண்களை மூடிக் கொண்டாள். மிகப்பெரிய சத்தத்துடன் கேட்டது இடி. அது கண்ணனின் வாழ்க்கையில் தான் விழுந்திருக்கின்றது என்ற உண்மையினை அறிந்துகொள்ள முடியாத சிறிய வயது அவளுக்கு.

கண்ணனின் கண் பார்வையை அந்தக் கொடிய மின்னல் இரவு நேரத்தில் வந்து களவாடும் திருடனைப் போல பறித்துக் கொண்டு போய்விட்டது. வெளிச்சம் போட்டு எல்லோரும் அறியும் வண்ணம் திருடிய தைரியமான திருட்டு. அந்த விபத்து நடந்த அதிர்ச்சியினால் ராதாவுக்கு காய்ச்சல் ஏற்பட்டு நீண்டநாள் படுக்கையில் கிடந்தாள். அதிலிருந்து மீண்டு பின்பு ஒருநாள் காலை வேளையில் கண்ணனைப் பாடசாலைக்குக் கூப்பிடப் பக்கத்து வீட்டுக்குப் போனாள்.

'அவன் இனிமே பாடசாலைக்கு வரமாட்டான் ராதாக்குட்டி' என்று கண்களில் நீர்த்துளி பனிக்க கண்ணனின் அம்மா சுவரில் முட்டிக் கொண்டு அழுதாள். அந்த அழுகைக் காட்சி மனதில் நிரந்தரமாய் பதிந்துவிட்டது. இதைப்போல கண்ணனின் அப்பா இறந்து போனபோது அவனது பார்வையில்லாத கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுக்க அமைதியாக அமர்ந்திருந்த காட்சி இன்னொன்று.

'கண்ணா! உன்னை விட்டுப் பிரிந்து என்னால் வாழ முடியாதடா' என்று இந்த நொடியும் கூட அவளது மனது புலம்பிக் கொண்டுதான் இருக்கிறது. அந்தப் பயமறியாத சிறிய வயதில் சாப்பிடுவதற்கு மட்டும் தான் ராதா வீட்டிற்கு வருவாள். ஏனைய நேரங்களில் எல்லாம் கண்ணன் வீடே கதி என்று கிடப்பாள்.

அவனுக்குத் தலையை வாரி விடுவாள். உணவை எடுத்துப் பரிமாறுவாள். குறும்புகள் செய்தால் அதனைச் செல்லமாகக் கண்டிப்பாள். ராதா தன்னுடைய சாம்ராஜ்யத்தில் அவளே ஆட்சி செய்யும் அரசியாகவும் கண்ணன் விசுவாசமிக்க பிரஜையாகவும் கொண்டு மனதில் ஒரு ஆட்சி நடத்தினாள். கல்யாணம் என்ற சுயநலத்தில் இப்போது அவனை விட்டுப் பிரிந்துபோய் விடுவதற்கா இவ்வளவும்...

ஆரம்பத்தில் எல்லா விடயமும் நன்றாகவே இருந்தது. ஓய்வில்லாமல் ராதா கண்ணனுக்குச் செய்கின்ற பணிவிடைகள். ஆனால், ராதா வயதிற்கு வந்த பின்பு ஊரவர்களின் பேச்சும் மாறிவிட ஆரம்பித்தது. ஊராரின் வெறும் வாய்க்கு ராதா அவலாக மாறினாள். கண்ணில்லாத கண்ணனைப் பற்றி ஒருவிதமான கதை கட்டி அதற்கு கண் மாத்திரமில்லாமல் காது, மூக்கு என்று எல்லாவற்றினையும் உருவாக்கியதே இந்த ஊர்தான்.

நிச்சயிக்கப்படவிருந்த மாப்பிள்ளைக்கு எல்லா விடயங்களையும் கடிதத்தில்எழுதிவிட்டாள் ராதா. இவள் எழுதாவிட்டால் தான் என்ன? இந்த ஊரில் இருந்து இரண்டு, மூன்று மொட்டைக் கடிதமாவது அவருக்குப் போகாதா? ஆனால், அவரிடமிருந்து இன்னும் பதில் கடிதம் வரவில்லை. ஒருவேளை பதில் வராதோ? வராவிட்டால் அதைப் பற்றிக் கவலையில்லை. எப்படியும் கண்ணனை விட்டுப் பிரியக் கூடாது.

தன்னையே நம்பியிருக்கின்ற கண் பார்வையில்லாத ஜீவன். அவனுடைய விதவைத் தாயாரைத் தவிர அவனுக்கு வேறு சொந்தங்களே இல்லை. தாயின் பின்பு அவனுக்கு யார் இருக்கிறார்கள் அவனைக் கவனிக்க. எல்லா விபரங்களையும் அவள் மாப்பிள்ளைக்கு தெளிவாகவே எழுதியிருந்தாள்.

இன்று மத்தியானம் தபால்காரன் வந்தபோது ஓடோடிச் சென்று கடிதத்தை வாங்கிக் கொண்டாள். இதயம் படபடவென அடிக்கக் கடிதத்தினைப் பரபரப்போடு பிரித்தாள். 'உனது கடிதம் கிடைத்தது. கண்ணனைக் கடிதத்திலும் அவன் இவன் என்றே குறிப்பிடுகிறாய். கடிதத்திலுள்ள விடயங்களை எல்லாம் யோசித்துப் பார்க்கும் போது நீ கண்ணனிடம் கொண்ட நேசம் தாய்ப்பாசம் என்பது நிச்சயமாகும். நான் ராதா-கண்ணன் என்ற பெயரைப் பார்த்து மயங்கவில்லை. ஊர் தான் பெயரில் மயங்கிக் கதை கட்டியதென்றால் நானுமா?

நமது கல்யாணம் நடந்த பிற்பாடு கண்ணனும் அவனது தாயாரும் நம்மோடு வந்து தங்கட்டும். உன் மகன் என் மகனும் ஆவான் அல்லவா?' என்பதாக அக்கடிதம் நீண்டு முடிவடைந்திருந்தது. வாசித்து முடித்ததும் ராதாவின் கண்கள் பனிக்க மனம் புளகாங்கிதமடைய அதனைத் திரும்பத் திரும்ப வாசித்தாள். கடிதத்தினைப் படித்துக்காட்ட அடுத்த வீட்டுக்கு ஓடிச் சென்றாள் ராதா.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
**Saturday மெயில் சிறுகதை**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15**
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திருப்பேன்...

பூ உதிர்ந்து
வாடுகின்ற காம்பு போல
நீ இன்றி
வாழுகிறேன் நானுமிங்கே
நீ கொண்ட காதலென்ன
நீர்மேல் கோலம் தானோ?
நான் கொண்ட காதலென்ன
இலைகள் மூடும் கனிகள் தானோ?
நீ போட்ட வேசம் அதை அறிந்தபின்பும்
நான் இங்கு காத்திருப்பேன்
நீ போடும் மணமாலைக்காக
இன் நினைவே இனிமைதான்
நடந்தால் அருமைதான்
நீ தரும் சுமையும்-எனக்கு
சுகங்கள் தான்
என் உயிரே தினம் தினம்
என் விழியில் நீரடா...
என் மனமோ நீ வருவாய் என
காத்திருக்கும்.

**ர.கீதா**
**சுன்னாகம்**

## வறுமை

தூக்கத்தில் மட்டுமே
ஒருவன் தன்னை மறக்கிறான்
ஒரு நாள் தம்பி
தூக்கத்தில் சிரித்தான்
விடிந்து கேட்டேன்
ஏனென்று
தன்னை மறந்ததால்
மகிழ்ச்சி வந்து
சிரித்திருக்கலாம் என்றான்
விடிந்த விடியலும்
இருட்டியது போன்றிருந்தது
எனக்கு இது போல
வறுமையால் சிரிப்பை
தொலைத்தவர்கள் எத்தனையோ!

**பா.ரிசாந்தன்-ஹொப்டன்**

## வீணை

மேனி தொட்டதால்
சப்தமிட்டேன்
என் கதறலை
வித்துவான்கள்
சங்கீதமெனக் கூறி
சமாளிக்கிறார்கள்

**பா.ரிசாந்தன்**




## புதுமையான கனா...!

காலநிலை விட்டெறிந்த
சுற்றறிக்கையிலே!
காலம் இன்று சுருங்குதடா
மானிடர்களே!
சுற்றுகின்ற பூமி கூட
காலம் தாழ்த்துதே!
சுற்றுச் சூழல் அழியுதடா
கண்ட இடமெல்லாம்
இந்த செய்தி கண்ட மனிதன்
கண்கள் கலங்கினான்
இருப்பிடங்கள் யாவற்றையும்
காக்க முயல்கிறான்
இதைக் கண்டு துயில்
கலைந்தேன்.

**என்.ஏ.மயூதரன்**
**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**யாழ்ப்பாணம்**

## அவா

பெற்ற மகனை
பெருமகனாக்குவது
தாயின் அவா

பெற்ற கல்வியை
மக்களுக்கு வழங்குவது
ஆசிரியரின் அவா

அறிவியல் நூல்களை
அழகுறச் சுமப்பது
மாணவனின் அவா

இலட்சணமான
உடைகள் அணிவது
பெண்களின் அவா

இலட்சிய
வாழ்க்கையில்
உயர்ந்து வாழ்வது
மனிதரின் அவா

அலங்காரச்
சொற்களை
உதிர்த்து புனைவது
கவிஞனின் அவா

அழகான கன்னியை
மனைவியாக்குவது
இன்ளஞனின் அவா

அறிவான
இளைஞனை
கணவனாக்குவது
கன்னியின் அவா

ஓலைக் குடில்களில்
ஒற்றுமையாய்
வாழ்வது
ஏழையின் அவா

கோயில் விழாக்களில்
கொம்புகள் பிடிப்பது
கொம்பரின் அவா

கிராம மக்களை
கிள்ளி விடுதல்
சாதியின் அவா

கள்ளுக் கொட்டிலில்
கத்தியைத் தீட்டுவது
சண்டியனின் அவா

அரச அலுவலகங்களில்
துயில் கொள்வது
பணியாளர் அவா

இலக்கிய உலகத்தில்
'மனிதமாய்' வாழ்வது
எழுத்தாளன் அவா

தேர்தல் நாட்களில்
வாக்குகள் சேகரிப்பது
தோல்வியின் அவா

யுத்தக் களங்களில்
இரத்தத்தில் நடப்பது
போரின் அவா

பிறந்த தன் நாட்டில்
சுதந்திரமாய் வாழ்வது
தமிழனின் அவா

**புலேந்தி**
**திலீப்காந்த்.**

## முறையிடும் பேனா முனைகள்!

அனர்த்தங்கள் வந்தது
அடிப்படையை
இழந்தோம்
அதை எண்ணியெண்ணி
எங்கள் வாழ்க்கையில்
வசந்தத்தை இழந்து
கஷ்டத்தை சுமந்து
கண்ணீரை வடித்தோம்

அடிக்கடி அதிகாரிகள்
சொகுசு வாகனங்களில்
விடிவுக்காய்
ஏங்கி நிற்கும்
நொந்து போன
எங்களிடம் வந்து
அவசரமாய் உங்களுக்கு
எல்லாத் தேவையும்
முடித்துத் தருகிறோம்
பொறுமையோடு இருங்கள்
என பம்மாத்து வார்த்தைகளை
'பேஷன்' நடைமுறையில்
பேசிச் செல்கிறார்கள்

ஆண்டுகள் தான்
அலையாய் கடந்து விட்டன
அல்லலுறும்
எங்கள் துயர் இன்னும்
அவல நிலையாய்
மாறிவிட்டன
இந்நிலை மாறிவிட- நாம்
எத்தனை நாள் தான் காத்திருப்போம்

மீளாத் துயரில்
மூழ்கிக் கொண்டு
வாழ நினைக்கும்
இவர்களின் குறைகளை
எழுது கோல்களும்
பொறுமை இழந்ததால்
'மனிதம்' மற்ற
மானிட சமூகத்தில்
முறையீடு செய்கிறது
பேனா முனைகளால்!...

**சுங்காவில் றியாழ்**

## போதையெனும் அரக்கனோடு...

எண்ணி இரண்டு
வருடங்கள்
மணம் முடித்தும்
எண்ண முடியாத
ஈர்ஜென்ம
ரணங்களாய் மதுவுடன்
வாழ்ந்த
என் மணவாளனோ -
இன்று
கட்டிலில், மதுவுடன்
அல்ல
ஊனத்துடன் உறங்கும்
நிலையே!

நிறைந்த மண நாளில்
அக்னி சாட்சியாய்
கரம்பற்றி
ஏற்றார் என்னை-அன்று
எரியத் தொடங்கியது
என் மணவாழ்வு
அக்கினியாய்...

கிராமமே அமைதியான
அந்திவேளை
என் கணவன் மாத்திரமே
நடமாடும் பிரசார
அரசியல் வாதியாய்
தெருவில் தனியாக அல்ல

போதையெனும்
அரக்கனோடு...

தன்னிடம் விடைபெற்ற
கடைசித்துளி
மதுவை மீண்டும்
நிரப்ப என்
பதியோ பாதை மாற்றினார்
கடைப்பக்கம்
மாறிய பாதை அவருடன்
சேர்த்து
என்வாழ்வையும்
மாற்றியது...

வாகனத்தின் தவறா? என்
மணவாளனின் தவறா?
என
வாதாட என் மனதில்
திடமோ
பையில் பணமோ
இருக்கவில்லை!
ஆனாலும் இனி
போதையெனும்
அரக்கனோடு வாதாட
தேவையும் இல்லையே!

**ஆர்.என்.காயத்ரி,**
**களுவாஞ்சிக்குடி.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
Saturday மெயில்
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

## நான் உன் மைந்தன்...

அன்னையின் அரவணைப்பின் பின்
என் அறிவை வளர்க்கும் தாய் நீ
ஒன்று அல்ல, இரண்டு அல்ல
ஏழேழு ஜென்மம் எடுப்பினும்
யாழ்.இந்து அன்னையாம் உன்னை
மறவேன் இது திண்மை

**ப.கஜமாலன்,**
**யாழ்.இந்துக் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நல்ல மாப்பிள்ளை' கிடைக்கும்வரை கருமுட்டைகளை பாதுகாக்கும் பெண்கள்



முப்பது வயதையும் நாற்பது வயதையும் தாண்டிய பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் தங்களுக்குப் பொருத்தமான மணமகன்களைத் தொடர்ந்து தேடிக் கொண்டிருக்கும் அதேவேளையில் தங்களது கருமுட்டைகளை உறை நிலையில் பாதுகாத்து வைக்க ஆரம்பித்து இருப்பதாக பிரிட்டிஷ் டாக்டர்கள் கூறுகிறார்கள்.

தங்களுக்குப் பொருத்தமான கணவர் கிடைக்கும் வரை திருமணம் செய்யாமல் இருக்கும் பட்சத்தில் நாளடைவில் தங்களது இனப் பெருக்க ஆற்றல் குன்றிவிடும் என்று இவர்கள் அஞ்சுகிறார்கள் என்று இனப்பெருக்க மருத்துவத்துக்கான லீட்ஸ் நிலையத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஆராச்சியாளரான ஸ்ரீலதா கோர்த்தியை மேற்கோள்காட்டி *dailymail.co.uk* தெரிவித்திருக்கின்றது.

ஆரோக்கியமான உடல் நிலையில் இருக்கின்ற பெண்கள் மத்தியிலும் கூட இந்த கருமுட்டைகளை உறை நிலையில் பாதுகாக்கும் நுட்பம் பிரபல்யம் பெற்றிருக்கிறது. புற்றுநோய் போன்ற பாரதூரமான நோய்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் பெண்களும் உரிய காலத்துக்கு முன் கூட்டியே மாதவிடாய் நின்றுவிடக் கூடிய ஆபத்தைக் கொண்ட பெண்களை இந்த நுட்பத்தில் பெரும் ஆர்வம் காட்டுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பெரும்பாலும் 35 க்கும் 40 க்கும் இடைப்பட்ட வயதைக் கொண்ட பெண்கள் தங்களுக்கு திருமணம் தற்போதைக்கு நடைபெறும் சாத்தியம் இல்லை என்று கண்டதும் எங்களை நாடி வருகிறார்கள் என்று பிரிட்டனின் மிகப்பெரிய மருத்துவ நிறுவனங்களில் ஒன்றின் முகாமைத்துவ பணிப்பாளரான சைமன் பிஸல் கூறுகிறார்.

இந்த பெண்களில் அதிகமானவர்கள் கண்ணியமான உத்தியோகத்தில் இருப்பவர்கள். அவர்கள் தங்களுக்கு பொருத்தமான மணமகன்களைக் கண்டு பிடிப்பதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள். இதனால், இவர்கள் பெரும் மனவேதனைக்கு உள்ளான நிலையில் எதிர்காலத்தில் பொருத்தமான மணமகன் கிடைக்கும் பட்சத்தில் தங்களுக்கென பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கருமுட்டைகளை பாதுகாப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள் என்றும் அவர் கூறினார்.



2009 ஜூலைக்கும் 2010 மேய்க்கும் இடையேயான காலகட்டத்தில் பெல்ஜியத்தில் உள்ள கிளினிக் ஒன்றில் தங்களது கரு முட்டைகளை உறைநிலையில் பாதுகாப்பதற்காக விண்ணப்பித்திருந்த சகல பெண்களையும் பற்றிய ஆய்வொன்றை அடுத்து இந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்தப் பெண்கள் நன்கு படித்தவர்களாகவும் பொருளாதார ரீதியில் வளமானவர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்கள் செயற்கை முறை கருத்தரித்தலை (*IVF*) செய்வதற்கு அல்லது கரு முட்டைகளை பளிங்குருவாக்கி (*vitrification*) அல்லது உறைநிலைக்குள்ளாக்கி (*freezing*) வைத்திருப்பதற்கு நூற்றுக்கணக்கான பௌண்ஸ்களை செலவு செய்வதற்கு முன்னதாக பிள்ளைகளை தத்தெடுப்பதற்கு அல்லது தனி ஒருவரான நிலையில் தாயாவதற்கு (*single motherhood*) முயற்சித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பொருத்தமான மணமகனை தேடிக்களைத்துப் போன இப்பெண்கள் சற்று ஆறுதலாக குறிப்பிட்ட காலத்துக்கு தங்கள் உத்தியோகங்களைப் பார்க்கும் நோக்குடனேயே கரு முட்டைகளை பாதுகாப்பதற்கு தீர்மானித்தார்கள் என்று அவர்களது டாக்டர்கள் கூறுகிறார்கள்.

நான் சந்தித்த பெண்கள் நல்ல தரமான பதவிகளில் இருக்கிறார்கள். மேலும் உயர் பதவிகளை அடைய வேண்டும் என்ற அக்கறையில் இவர்கள் தற்போதைக்கு மணம் செய்யாமல் இருக்க விரும்புகிறார்கள். அதனாலும் இவர்கள் கரு முட்டைகளை பாதுகாத்துக்கொள்ள அக்கறை கொண்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது என்று ஆய்வுக்கு தலைமை தாங்கிய புருஸெல்ஸ் உள்ள ஃபிரீ பல்கலைக்கழகத்தின் இனப்பெருக்க மருத்துவத்துக்கான நிலையத்தைச் சேர்ந்த ஜீலீ நெக்ரூக் கூறினார்.



## நல்ல செய்தியும் கெட்ட செய்தியும்



தனது ஓவியங்களை கண்காட்சிக்கு வைத்த ஓவியர் ஒருவர் கலாபவனத்தின் உரிமையாளரிடம் எனது ஓவியங்களில் எவருக்காவது அக்கறை இருக்கிறதா என்று கேட்டார்.

உங்களுக்கு கூறுவதற்கு நல்ல செய்தியும் என்னிடம் உண்டு. கெட்டசெய்தியும் உண்டு என்று உரிமையாளர் சொன்னார். 'நீங்கள் இறந்த பிறகு இந்த ஓவியங்களின் பெறுமதி அதிகரிக்குமா, என்று ஒருவர் கேட்டார். ஆம் என்று நான் அவருக்குப்பதில் சொன்னேன்.அவர் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த உங்களது சகல ஓவியங்களையும் விலை கொடுத்துவாங்கிக் கொண்டு சென்றுவிட்டார்' என்று கலாபவன உரிமையாளர் மேலும் சொன்னார்.

'சரி அது நல்ல செய்தி. கெட்ட செய்தி இருப்பதாகவும் கூறினீர்கள் அல்லவா? அது என்ன?' என்று ஓவியர் கேட்டார்.

கலாபவன உரிமையாளரிடமிருந்து வந்த பதில்; 'ஓவியங்களை வாங்கிச் சென்றவர் உங்களது டாக்டர்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போய் வருகின்றேன் நன்றி!

டெஸ்ட் போட்டிக்கு 'குட்பை' சொல்கிறார் முரளிதரன். இந்தியாவுக்கு எதிரான காலியில் 18 ஆம் திகதி ஆரம்பமாகும் முதல் டெஸ்ட் போட்டிக்கு பின், முறைப்படி ஓய்வு பெறுகிறார்.

இலங்கையின் 'சுழல் மன்னன்' முரளிதரன் 1992 இல் தனது 20 ஆவது வயதில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் அறிமுகமானார். 1995 இல் மெல்போனில் நடந்த அவுஸ்திரேலியாவுடனான டெஸ்டில் இவர் பந்தை எறிவதாக சர்ச்சை எழுந்தது. அளவுக்கு அதிகமாக கையை வளைத்து பந்து வீசுவதாக கூறிய டேரல் ஹேர் 7 முறை 'நோ - போல்' கொடுத்து அதிர்ச்சியளித்தார். இதிலிருந்து மீண்ட முரளிதரன் சாதனை வீரராக ஜொலித்தார்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அதிக விக்கெட்டு வீழ்த்தியுள்ளவர்களின் பட்டியலில் முதலிடத்தை பிடித்தார். இதுவரை 132 டெஸ்டில் 792 விக்கெட் வீழ்த்தியுள்ளார். 337 ஒரு நாள் போட்டிகளில் 515 விக்கெட் கைப்பற்றியுள்ளார். 11 'ரூவென்ரி-20' போட்டிகளில் பங்கேற்று 13 விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

**ஓய்வு முடிவு:** ஐ.பி.எல். 'சென்னை சுப்ப கிங்ஸ்' அணியில் இடம்பெற்றுள்ள இவர், சமீப காலமாக காயத்தால் அவதிப்பட்டு வந்தார். இதையடுத்து ஓய்வுபெற முடிவு செய்தார். ஆசிய கிண்ணத் தொடர்முடிந்தவுடன், இலங்கை அணியின் தேர்வுக் குழுத் தலைவர் அரவிந்த டி சில்வா மற்றும் கப்டன் சங்ககாரவை சந்தித்து தனது விருப்பத்தை தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் முழுமையாக பங்கேற்கும் படி தேர்வுக் குழுவினர் வலியுறுத்தியுள்ளனர். இதனை ஏற்க மறுத்த முரளிதரன், 18 இல் தொடங்கும் இந்தியாவுடனான காலி டெஸ்ட் போட்டியுடன் விடைபெறுவதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து இலங்கைக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் 'மிகச் சிறந்த' ஒவ்- ஸ்பின்னரான 'முரளிதரன், காலி டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறுகிறார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆசியுடன் விடைபெறுகிறார்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உலகக் கிண்ணம்:** டெஸ்டிலிருந்து ஓய்வு பெற்றாலும், 2011 இல் இந்திய துணைக் கண்டத்தில் நடக்கும் உலகக் கிண்ண (50 ஓவர்) தொடரில் பங்கேற்க ஆர்வம் தெரிவித்துள்ளார் முரளிதரன். இது பற்றி இவரது முகாமையாளர் குஷில் குணசேகரா கூறுகையில்;

'இந்தியாவுக்கு எதிராக 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் அவசரமாக அறிவிக்கப்பட்டதால், ஓய்வுபெற முடிவு செய்தார். இவருக்கு மாற்றாக, சிறந்த வீரர்கள் யாரும் கிடைக்காத பட்சத்தில் 2011 உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க வேண்டுமென தேர்வாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்' என்றார்.

**18 ஆண்டுகள்:** கடந்த 18 ஆண்டுகளாக கிரிக்கெட் விளையாடி வரும் முரளிதரன், டெஸ்ட் போட்டிகளில் ஆயிரம் விக்கெட் வீழ்த்தவேண்டுமென எண்ணியிருந்தார். இதற்கு உடல் நிலை ஒத்துழைக்கவில்லை. டெஸ்ட் மட்டுமல்ல அனைத்து வகையான போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவும் வாய்ப்புள்ளது. இது குறித்து சமீபத்தில் இவர் கூறுகையில்;

'தற்போது 38 வயதாகி விட்டது. டெஸ்ட் போட்டிகளில் முன்புபோல பந்துவீச முடிவதில்லை. 15 முதல் 16 ஓவர்கள் வீசினால் மிகுந்த களைப்படைந்து விடுகிறேன். ஒருநாள் போட்டிகளில் 10 ஓவர் வீசினால் போதும் என்பதால் பிரச்சினை இல்லை. இதிலும் சிரமம் ஏற்பட்டால் உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்பாகவே அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் விடைபெறுவேன்' என்றார்.



**மும்மூர்த்திகள்:** டெஸ்ட் அரங்கில் இந்தியாவின் கும்ளே (619), அவுஸ்திரேலியாவின் வோர்ன் (708 விக்.) மற்றும் முரளிதரன் ஆகியோர் 'சுழல்' ஜாலம் காட்டினர். கும்ளே, வோர்ன் ஓய்வு பெற்று விட்ட நிலையில், இவர்களுக்கு நிகரான வீரர்களை இன்று வரை கண்டறிய முடியவில்லை. தற்போது முரளிதரனும் ஓய்வுபெறவுள்ளதால் டெஸ்ட் போட்டிகளில் மிகப் பெரும் வெற்றிடம் ஏற்படும்.




# ஐரோப்பிய அணிக்கே கிண்ணம்



ஐரோப்பிய கண்டத்துக்கு வெளியே நடந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் கிண்ணம் வென்றதில்லை என்ற இழுக்குடன் இருக்கும் ஐரோப்பிய அணிகள் இந்த முறை அதை கைப்பற்றவுள்ளன.

இதுவரை நடந்துள்ள 18 (தென்னாபிரிக்காவைச் சேர்க்காமல்) உலகக் கிண்ணப் போட்டிகளில் ஐரோப்பிய கண்டத்தில் நடந்த போட்டிகளில் ஐரோப்பிய அணி எதுவும் வெற்றி பெற்று கிண்ணத்தை வென்றதில்லை. இது வலுவான ஐரோப்பிய அணிகளுக்கு பெரும் இழுக்காக இருந்து வருகிறது. ஆனால் அதற்கு இப்போது விடிவு காலம் பிறந்துவிட்டது.

தென்னாபிரிக்காவில் நடந்து வரும் 16 ஆவது உலகக் கிண்ணப்போட்டித் தொடரின் அரையிறுதிக்குத் தகுதி பெற்ற நான்கு அணிகளில் உருகுவே மட்டும்தான் தென் அமெரிக்க அணியாகும். மற்ற மூன்றும் ஐரோப்பிய அணிகளாகும். எனவே இறுதிப் போட்டிக்கு இரண்டு ஐரோப்பிய அணிகள் முன்னேறினால் இழுபறிக் கிண்ணம் ஐரோப்பாவின் வசமாகும் வாய்ப்பு உறுதியாகுமென்ற நிலையில் அரையிறுதியில் உருகுவே தோற்றதால் தற்போது அது சாத்திமாகியுள்ளது.

முதலில் ஜேர்மனி கிண்ணம் வெல்லும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அடுத்து ஸ்பெயின் அணி மீது அதிக நம்பிக்கையிருந்தது. உருகுவே, நெதர்லாந்து ஆகியவற்றுக்கு சமமான அளவில் ஆதரவு காணப்பட்டது. இருப்பினும் உருகுவே அணி கிண்ணத்தை வெல்வது கடினம் என்று பொதுவான கருத்து காணப்பட்டது போல் அந்த அணி தோற்றுவிட்டது.

ஜேர்மனி மிகவும் வலுவாக இருந்ததால் அந்த அணிக்கே இந்த முறை கிண்ணம் என்பது கால்பந்து ரசிகர்களின் வலுவான நம்பிக்கையாக இருந்தது.

கடந்த முறை நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஐரோப்பாவைச் சேர்ந்த பிரான்ஸும் இத்தாலியும் மோதின. இந்த முறை உருகுவே அணி தோற்கடிக்கப்பட்டதால் தொடர்ந்து 2 ஆவது முறையாக ஐரோப்பிய அணிகள் மோதும் இறுதிப் போட்டியாக இது அமைந்துள்ளது.

தற்போதைய உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் சுற்றுப் போட்டிகளில் 13 ஐரோப்பிய அணிகளில் 7 வெளியேற்றப்பட்டன. அதேசமயம் ஐந்து தென் அமெரிக்க அணிகளும் தோல்வியே அடையாமல் 'நொக் அவுட்'ரவுண்டுக்கு முன்னேறின. 'நொக் அவுட்' ரவுண்டில் உருகுவேயைத் தவிர அனைத்துத் தென்

அமெரிக்க அணிகளும் தோற்றுப் போயின. அதேசமயம் ஐரோப்பிய அணிகள் உலகின் அனைத்துப் பகுதி அணிகளையும் வென்று அரையிறுதிக்குள் வந்தன.

1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2002 இல்தான் அரையிறுதியில் 3 ஐரோப்பிய அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன. அதன் பிறகு இப்போதுதான் 3 அணிகள் அரையிறுதிக்கு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

எனவே இந்த முறையும் ஐரோப்பாவுக்கே கிண்ணம் அதுவும் ஐரோப்பிய கண்டத்துக்கு வெளியே வெல்லப்படும் முதல் கிண்ணமென்பதால் ஐரோப்பிய ரசிகர்கள் குஷியாக உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கனவிலும் பெரியது...

ஆறடி ஒரு அங்குல உயரம், 85 கிலோ எடை, உலக அரங்கில் தலைசிறந்த டெனிஸ் வீரராக அறிமுகமான ஆண்டு 2001. ஆண்டு வருமானம் சுமார் 32,248,542 அமெரிக்க டொலர்கள். இவை ரபேல் நடாலின் தன் குறிப்புத் தரும் விபரங்கள்:

யார் இந்த ரபேல் நடால்? 24 வயதில் இரண்டாவது முறையாக விம்பிள்டன்கிராண்ட்ஸ்லாம் போட்டியில் வெற்றி பெற்றுச்சாதனை படைத்திருக்கும் ஸ்பெயினைச் சேர்ந்த இளைஞர்.

மத்தியதரைக்கடல்பகுதியில் உள்ள மெஜோர்கன் என்ற தீவிலுள்ள ஸ்பெயினைச் சேர்ந்த ஒரு சிறு நகரம் மேனாக்கர். இந்த நகரில் செபஸ்ரியன் நடால் என்பவரின் மகன்தான் ரபேல் நடால். இவரது பெரியப்பா மிக்குவன் நடால் ஒரு கால்பந்தாட்ட வீரர். ஸ்பெயினுக்காக விளையாடியிருப்பவர். சிறுவயதில் நடாலுக்கும் முதலில் கால்பந்தாட்டத்தில்தான் நாட்டம் இருந்தது.

இவரது சித்தப்பா டோனி நடால் ஒரு முழு நேர டெனிஸ் வீரர் என்பதாலோ என்னவோ ரபேல் கால்பந்தாட்டத்தைவிட டெனிஸில் பெயரும் புகழும் அடைய முடியுமென்று இனங்கண்டு கொண்டார்.

விடயம் தெரியுமா? ரபேலின் பெரியப்பாவும் சித்தப்பாவும் போட்டி போட்டுக்கொண்டு மூன்று வயது முதலே ரபேலைக் கால்பந்தாட்டத்துக்கும் டெனிஸுக்கும் தயார் செய்ய முற்பட்டனர். எட்டு வயதில், பிராந்திய அளவிலான சிறுவர்களுக்கான டெனிஸ் பந்தயத்தில் வெற்றி பெற்றபோது ரபேல் ஒரு பிரகாசமான கால்பந்தாட்ட வீரராகவும் இனங்காணப்பட்டார்.

டெனிஸில் 'போர் ஹண்ட் ஷொட்' என்பது பந்தை அடிக்கும் முக்கியமான முறை சிறுவன் ரபேலுக்கு இந்த 'போர் ஹண்ட் ஷொட்'டை இயற்கையாகவே இரண்டு கைகளாலும் அடிப்பதில் திறமையிருப்பதை கவனித்த சித்தப்பா டோனி நடால் ஒரு புத்திசாலித்தனமான முடிவெடுத்தார்.

டெனிஸ் விளையாட்டில் இடது கைப்பழக்கம் என்பது சாதகமான அம்சம். எதிரியைச் சட்டென்று வீழ்த்திவிடும் லாவகம் இடது கையால் வலிமையாக அடிக்கும்போது கிடைக்கும். ரபேலை இடதுகை விளையாட்டு வீரராக உருவாக்க தலைப்பட்டார் டோனி. ஒரே நேரத்தில் டெனிஸிலும் கால்பந்திலும் வெற்றிகளைக் குவித்து வந்த சிறுவன் ரபேல், ஒரு நாள் தந்தை செபாஸ்ரியன் தனது மகனை அழைத்தார்.

உனது படிப்புக்குக் குந்தகம் வந்துவிடக்கூடாது. அதனால் ஏதாவது ஒரு விளையாட்டை மட்டும் தேர்ந்தெடுத்து அதிலும் படிப்பிலும் கவனம் செலுத்தினால் போதும் என்று அறிவுறுத்திய போது, ரபேல் தேர்ந்தெடுத்தது டெனிஸை. அப்போது, சிறுவன் ரபேலை வாரி அணைத்துக் கட்டிக்கொண்டு குதூகலித்தாராம் சித்தப்பா டோனி. இன்றுவரை ரபேலின் டெனிஸ் பயிற்சியாளர் சித்தப்பா டோனி நடால்தான்.

14 வயதாக இருக்கும்போதே, ரபேலின் திறமை வெளியுலகத்துக்குப் பளிச்சிட்டது. ஸ்பானிஷ் டெனிஸ் பெடரேஷன், பார்சிலோனாவுக்கு வரும்படியும் அங்கே பயிற்சி மேற்கொள்ளலாம் என்றும் ரபேலுக்கு அழைப்பு விடுத்தது. அமெரிக்காவிலிருந்து, எல்லா வசதிகளையும் செய்து தருவதாகவும் அங்கேயே தங்கியிருந்து பயிற்சி எடுக்கும்படியும் வற்புறுத்தல்கள் வந்தன.

''உனது திறமையை இங்கேயே இருந்து பார்த்துக் கொள்ளலாம். இதற்காக அமெரிக்கா போக வேண்டிய அவசியம் இல்லை. நமது ஊர், நமது தேசம் நமக்குத் தரும் வசதிகளை பயன்படுத்தி நமது ஊருக்கும் தேசத்துக்கும் நீ புகழ் சேர்க்க வேண்டுமென்பதுதான் எனது விருப்பம்!'' இது தந்தை செபாஸ்ரியன் நடாலின் தீர்மானமான முடிவு. மகன் தந்தையின் விருப்பத்துக்கு முகம் சுளிக்காமல் மகிழ்ச்சியுடன் தலைவணங்கினான்.



17 வயதில் உலகின் தலைசிறந்த 50 டெனிஸ் வீரர்களில் ஒருவர் 18 வயதிற்குள் 24 போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெற்று ஆண்ட்ரி அகாசியின் சாதனையை முறியடித்த பெருமைக்குரிய வீரர், வெற்றிகள் தொடர்ந்தன. 2005 ஆம் ஆண்டு பிரெஞ்ச் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றதன் மூலம் அறிமுக போட்டியில் பட்டம் வென்ற இரண்டாவது வீரர் என்ற பெருமையை நடால் பெற்றார்.

தொடர்ந்து 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் பிரெஞ்ச் ஓப்பனில் சாம்பியன் பட்டம் வென்று ஹாட்ரிக் சாதனை படைத்தார். நடால் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரெஞ்ச் ஓப்பனில் சுவீடனின் ரொபின் சோடர்லிங்கிடம் தோற்றார். 2010 பிரெஞ்ச் ஓப்பனில் ரொபின் சோடர்லிங்கை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றார் நடால். இதில் ஒரு செட்டை கூட இழக்காமல் நடால் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

2009 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய ஓப்பனில் சாம்பியன்பட்டம் வென்றுள்ளார்.

2008 ஆம் ஆண்டு விம்பிள்டன்கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற நடால், 2009 ஆம் ஆண்டு அதை தவறவிட்டார். கால்மூட்டில் ஏற்பட்ட பிரச்சினையால் கடந்த ஆண்டு ஏற்பட்ட தோல்வியை இந்த ஆண்டு சமன் செய்திருக்கிறார் ரபேல்.

விம்பிள்டன் சாம்பியனாகியிருக்கும் ரபேல் நடால் 24 வயதுக்குள் 8 பெரிய டெனிஸ் போட்டிகளில் சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார். ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விம்பிள்டன்கிராண்ட்ஸ்லாம் டெனிஸில் நடால் 6-3, 7-5, 6-4 என்ற செட் கணக்கில் செக். குடியரசின் தோமஸ்பெர்டிச்சை வீழ்த்தினார்.

கடந்த 11 மாதங்களில் ஒரு போட்டியில் கூட வெற்றிபெற முடியாத அவஸ்தைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். இரண்டாவது முறையாக விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது பற்றிநடால் என்ன கூறுகிறார்?'' எனது கனவை விடப் பெரிய வெற்றி!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான வத்திக்கானின் புதிய நடவடிக்கைகள்

உலக வலம்

ச.துஷ்யந்தினி

கத்தோலிக்கப் பாதிரிமார் மீதான பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகள் அண்மைக் காலமாக உலக அரங்கில் அடிக்கடி ஒலித்துக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

பாலியல் வல்லுறவு,சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பாதிரிமார்களுக்கு எதிராக வெளிவந்து கொண்டிருக்கும் குற்றச்சாட்டுகளால் கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப் பீடமான வத்திக்கான் அதிர்ச்சியில் உறைந்துள்ளது.

அண்மைக்காலமாக பாதிரிமார்களின் நடத்தையுடன் தொடர்புடைய நூற்றுக் கணக்கான சம்பவங்கள் வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன.

அது மட்டுமன்றி குற்றமிழைக்கும் பாதிரிமார்களை பேராயர்கள் பாதுகாத்து வருவதாகவும் இவ்விவகாரத்தில் வத்திக்கான் கண்களை மூடிக்கொண்டிருப்பதாகவும் கூட குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்நிலையில் மதகுருமாரின் பாலியல் துஷ்பிரயோக விவகாரங்களை கையாள்வதற்கான தேவாலய நடைமுறைகளை உள்ளடக்கிய புதிய ஆவணமொன்றை பரிசுத்த பாப்பரசர் பதினாறாம் பெனடிக்ற் விரைவில் வெளியிட உள்ளதாக வத்திக்கான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


இவ் ஆவணம் குற்றமிழைத்தவர்களை சட்டரீதியாக தண்டிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றமிழைத்த பாதிரிமார்களின் மதகுரு அந்தஸ்தை இரத்து செய்தல் உள்ளிட்ட கடுமையான தண்டனைகளை வழங்கும் நடைமுறைகள் தேவாலயங்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை துஷ்பிரயோகங்கள் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டிருந்தால் பேராயர்கள் சிவில் சட்டங்களை பின்பற்ற வேண்டுமென்ற சம்பிரதாயபூர்வமற்ற நடைமுறைகளை இவ்வருட முற்பகுதியில் வத்திக்கான் அறிவித்திருந்தது.

ஆனால் புதிய விதிகள் சிவில் சட்டங்களின் சரத்துகளைக் கொண்டிருக்குமா என்பது தெளிவுபடுத்தப்படவில்லை.

இதேவேளை சிவில் சட்டங்களின் ஏற்பாடுகள் நாட்டுக்கு நாடு வேறுபடுவதால் இவற்றை உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தேவாலய நடைமுறைகளுக்குள் உள்ளடக்குவது கடினமென திருச்சபை அங்கத்தவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.




பாதிரிமார்களால் மேற்கொள்ளப்படும் சிறுவர் துஷ்பிரயோக விவகாரங்களை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் 2001 இல் பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் ஜோன் போலினால் வெளியிடப்பட்ட நடைமுறைகளில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய விதிகள் வெளியிடப்படவுள்ளன.

2001 விதிகளின் பிரகாரம் நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகளை பேராயர்களின் திருச்சபைக்கு அறிவிக்க வேண்டுமெனவும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான விசாரணைகள் தொடர்பில் தேவாலய திருச்சபையே தீர்மானிக்குமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் 2003 இல் இவ்விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு குற்றச்சாட்டுகள் குறித்த போதிய ஆதாரங்கள் இருப்பின் குறிப்பிட்ட தேவாலய நிர்வாகமே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது வெளியாகவுள்ள புதிய விதிகள் தேவாலய திருச்சபைக்கான நிரந்தர சட்டமொன்றை உள்ளடக்கியிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் புதிய விதிகளின் பிரகாரம் இணையத்தளங்களிலிருந்து சிறுவர் துஷ்பிரயோக ஒளிப்பதிவுகளை பதிவிறக்கம் *(download)* செய்கின்றமை பாரிய குற்றமாக கருதப்படவுள்ளதாக வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


பாதிரிமாரின் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களிடம் பாப்பரசர் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியிருந்த போதும் இவ்விவகாரம் தொடர்பில் வத்திக்கான் போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லையென பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் குரல் கொடுத்து வரும் அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

இந்நிலையில் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள நடைமுறைகள் இவ்வாறான துஷ்பிரயோகங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான சரத்துகளை கொண்டிருப்பதுடன் குற்றமிழைத்தவர்களுக்கு கடுமையான தண்டனைகளை வழங்கக் கூடியதாக இருக்க வேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

ஏனெனில் இவ்வாறான துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்படுபவர்களுக்கு ஏற்படும் உளரீதியான காயங்களை எந்தவொரு நஷ்டஈட்டினாலும் குணப்படுத்த முடியாது.

நல்லொழுக்கங்களையும் அறநெறிகளையும் சமூக விழுமியங்களையும் போதிக்கும் மதத்தின் புனிதம் இவ்வாறான குற்றச்சாட்டுகளால் கெட்டுவிடக் கூடாது.

எந்த மதத்தைச் சார்ந்தவராயினும் நிம்மதியையும் நல்வாழ்க்கையையும் தேடி சந்நிதானத்துக்கு வருபவர்கள் காயங்களுடன் திரும்பிச் செல்லாதிருப்பதை மதத் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











உங்களை கிறங்க வைப்பவர் ஸ்ரேயா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.